உ

குமரன் துணை

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

வால்யூம் 5. } 1908 ௵ டிசம்பர் ௴ { புஸ்தகம் 12.

வித்தியா இலாகாவின் புதுச்சட்டங்கள்.

வித்தைவிஷயமாய் நம் பாநுவில் பதினெட்டுமுறை எழுதியதை பாநுவை வாசிப்போர் பலரும் அறிந்திருப்பார்கள். பிரதம சிக்ஷை தொடங்கிப்பலவிதமான கல்வியைப்பற்றி நீள நினைந்து எழுதினவைகளிற்பல வர வர அநுஷ்டானத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன. கூர்ந்து வாசித்தவர்களுக்கு இதன் உண்மை நன்கு விளங்கும். சமீபகாலத்தில் வித்தியா விஷயமான சீர்திருத்தங்கள் பல வெளியாயிருக்கின்றன. அவைகளின் யுக்தா யுக்தங்களைப்பற்றி ஆராய்வோம். அவைகளை மூன்றுபாகங்களாகப் பிரித்துக்கொண்டு முதற்பாகமாகிய பிரதமபாடசாலை (Elementary School) விஷயமாய் முதலிற் பேசுவோம். பிரதம பாடசாலைவிஷயமாய்ப் பல நிர்ப்பந்தங்கள் முன் ஏற்பட்டிருந்தன. அவைகளின் உபாத்தியாயர்கள் நார்மல்பாடசாலையிற் பழக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்றும் சாய்மான பெஞ்சுகள் வேண்டுமென்றும் சேர்வதற்கு சர்ட்டிபிகேட்டுகள் வேண்டுமென்றும் இன்னும் இவைபோன்ற சில அநாவசியமான விஷயங்கள் வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டுவந்தன. புது விதிப்படி இவ்விதமான நிர்ப்பந்தங்கள் எவையும் கிடையா. எலிமென்டரி பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர் போதனமுறை பாடசாலையிற்பயின்றவராயிருக்கவேண்டிய அவசியமில்லை. சொல்லிக்கொடுக்க ஏற்பட்டவிஷயங்களைப் போதிக்கத் திறமையுடையவரென்று இன்ஸ்

பெக்டிங் அதிகாரிகள் அபிப்பிராயப்பட்டால் போதுமானது. சம்பள வசூலைப்பற்றியும், சர்டிபிகேட்டைப்பற்றியும் யாதொரு நிர்ப்பந்தமும் கிடையாது. உபாத்தியாயர் இஷ்டப்படி செய்துகொள்ளலாம் உபாத்தியாயர் ஒவ்வொருவருக்கும் மாசம் ஒன்றுக்கு ரூபா மூன்று சம்பளம் சர்க்காரில் கொடுப்பதாக ஏற்பாடு செய்திருப்பதுடன் வாசிக்கும் ஒவ்வொரு பையனுக்கும் வருஷம் ஒன்றுக்கு அரைரூபா வீதம் கிராண்டு கொடுப்பதாகவும் ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். கிராமாந்தரங்களிலிருக்கிற சிறு பள்ளிக்கூடங்களுக்கு இவைமிக்க அநுகூலமே. முன் வருஷம்ஒன்றுக்கு நான்கு ரூபாவும் மூன்று ரூபாவும் கிராண்டுவாங்கிவந்த பாடசாலைகள் அநேகம். இனியோ குறைந்தபக்ஷம் உபாத்தியாயருக்கு வருஷத்தில் நாற்பது ஐம்பது ரூபாவுக்குக் குறைவில்லை. சம்பள வசூல் உபாத்தியாயர் இஷ்டப்படி எதையும் வசூலித்துக்கொள்ளலாம். இம்மட்டில் விட்டுவிட்டால் கிராம உபாத்தியாயருக்கு நஷ்டமில்லை. இலாபமென்றே கூறலாம். இவை நிற்க; முன் நிர்ப்பந்தங்களும் ஒழிந்துவிட்டன. உபாத்தியாயர் சுவேச்சையாய் வேலைபார்க்கலாம். சரியானபடி வேலைபாராவிடின் கிராமத்தாரிடமிருந்து கிடைக்கும் வரும்படி குறைந்துவிடும். ஆகையால் உபாத்தியாயர் கூடியவரை ஜாக்கிரதையாகவே இருந்துதீரவேண்டும். ஆனால் இவ்வேற்பாடு பட்டணங்களில் உள்ள பெரிய பாடசாலைகளுக்குமட்டும் அனர்த்தமாயிற்று. மானேஜர்கள் கிராண்டை எதிர்பார்த்துத் தங்கள் கைப்பணத்தை முன்னதாகச் செலவுசெய்து பின் ஈடுபண்ணிக்கொள்வார்கள். அந்தக் கிராண்டைக்கொண்டு தக்கஉபாத்தியாயர்களை ஏற்படுத்தி பள்ளிக்கூடங்களை ஒழுங்காக நடத்திவந்தார்கள். அதனால் கல்வியோ மிகவும் அபிவிருத்தியாகிக்கொண்டுவந்தது. தற்கால ஏற்பாட்டின்படி அவையெல்லாம் அடியோடே தொலையத்தொடங்க இடமாயிற்று. ஏனெனில் புதுச்சட்டப்பிரகாரம் பழைய அப்பர்பிரைமரி பள்ளிக்கூடம் இரண்டுவிதமாக இருக்கலாம் எலிமெண்டரிபாடசாலையாக இருக்கக்கருதினால் முன் நானூறு ரூபா கிராண்டு வாங்கிவந்தபாடசாலை இப்பொழுது இருநூற்றைம்பதுக்குமேல் அதிகமாய்த் திரவியசகாயம் பெற இடமில்லை. உதாரணமாக 150 பிள்ளைகளுள்ள பழைய அப்பர் பிரைமரி பாடசாலைக்குத் தற்காலசித்திப்படி கிடைக்கக்கூடியது யாதென்றுபார்ப்போம். ஐந்

ஆவகுப்புகளுக்கும் ஐந்து உபாத்தியாயர்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்குப் பதினைந்து ரூபாவிதம் ஒருவருஷத்துக்கு 180 ரூ. ஆகிறது. பையன் ஒன்றுக்கு எட்டணவிதம் 150 பையன்களுக்கும் எழுபத்தைந்துரூபா ஆகிறது. ஆக மொத்தம் இருநூற்றைம்பத்தைந்தேஆகும். இதுவரை அநுஷ்டானத்தில் இருந்துவந்தவிதிப்படி நானூறு அல்லது குறைந்தபக்ஷம் முன்னூற்றைம்பது கிடைத்துவந்தது. ஆகையால் தற்காலவிதிப்படி எலிமெண்டரி பாடசாலையாகவைத்துக் கொண்டால் நஷ்டமே. ஒரு மானேஜர் அதேபாடசாலையை செகண்டரியாக வைத்துக்கொண்டால் ஒருகால் அதிக திரவியசகாயம் கிடைக்கலாம். ஆனல் நாலாவது வகுப்பு இருந்தால் சர்டிபிகேட்டுபெற்ற பி. ஏ. அதற்குத்தலைமை உபாத்தியாயராக இருக்கவேண்டுமாம். இவ்வாறுசெய்வது ஸாத்தியமானகாரியமா? ஒருக்கால் ஒருமானேஜர் அவ்வாறுதக்கஉபாத்தியாயரை நியமனம் செய்யச்சம்மதித்தாலும் தக்க சம்பளம அவருக்கு வித்தியா இலாகாதார் கொடுத்துதவுவார்களா? அல்லது ஒரு பி. ஏ. அந்த பாடசாலைக்குத்தலைமை உபாத்தியாயரா யிருக்கச்சம்மதித்து வேலையை ஒப்புக்கொள்வாரா? அவரது அபிவிருத்திக்கு அப்பாடசாலை இடங்கொடுக்குமா? இந்தவிதத்தை அநுசரித்தலும் அப்பாடசாலைக்குக்கேடாகவே முடியும். ஆக மேற்கூறிய இருவிதங்களாலும் அப்பாடசாலைக்குக்கேடே உண்டாகிறபடியால் அவ்விதப்பாடசாலைகள் இனி நம் நாட்டிலிருப்பது அபூர்வமாகும். இவ்வித பாடசாலைகள் ஒரு ஸெகண்டரி பாடசாலையின் கிளையாகஇருந்து அப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயர் இதனை மேற்பார்வைபார்க்கச் சம்மதித்துப் பாடசாலையும் சமீபத்திலிருந்து இன்ஸ்பெக்டரும் ஒப்புக்கொண்டால் பாதகம்வராது. அப்படியிருக்கச் சம்மதித்தாலும் புதிதாகச்சேர்க்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்குள்ள நிர்ப்பந்தம் இவைகளுக்குமுண்டு. ஆகையால் உயர்தரப்பிரதம பாடசாலைகள் முற்றுமொழியத் தலைப்படுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. எலிமெண்டரி பாடசாலைகளில் மூன்றுவதுபாரம் வரையிலுள்ள உயர்ந்த வகுப்புக்கள் இருக்கலாமென்றும் ஆனல் அவைகள் தேசபாஷையையேமுக்கியமாய்க் கற்பிக்கவேண்டுமென்றும் ஆங்கிலம் இஷ்டபாடமாகக் கற்பிக்கப்படலாமென்றும் ஏற்பட்டிருக்கின்றது. அவ்வித

பாடசாலைகள் ஏற்படுவது துர்லபம். மானேஜர்கள் கைஷ்டப்பட்டு இவ்விஷயத்தில் ஏற்படுவது அதினும் துர்லபம். ஆகையால் பிரதமசிக்ஷை பழையகாலம்போல் செவ்வையாய்நடவாமல் அரை குறைவாகவே இருக்கும். ஆகையால் இதுவிஷயத்தைப்பற்றி நம் நாட்டார் மீள நினைந்து செய்யவேண்டியவை பல இருப்பதாலும் இன்னும் பிரதமபாடசாலைவிஷயமாய் வருங்காலத்தில் சில ஏற்பாடுகள் ஆகப்போகிறதாகத் தோன்றுகிறபடியாலும் அவ்விஷயத்தைக்குறித்துப் பின்னும் அதிகமாய் அடுத்தமுறை எழுதுவோம்.

பத்திராதிபர்.

சிருஷ்டியின் அற்புதங்கள்.

பிராணிகளின் அபூர்வ சிநேகம்.

:o:

நம் தமிழ்நாட்டாருக்கு இவ்விஷயம் அதிசயமாகத் தோன்றுவிடினும் அவர்கள் அறியவேண்டிய அதிசயமான விஷயங்கள் பலவுண்டு. பஞ்சதந்திரத்தில் சிங்கம், எருது, மான், புறா, காகம், எலி முதலை, குரங்கு முதலிய பிராணிகளுக்குள் பலமான நட்பு இருந்ததாகவும் அவைகள் அந்நட்பைத் தமக்குச்சமயம் வாய்த்தபோது பயன்படுத்திக்கொண்டு சுகமாய் வாழ்ந்ததாகவும் படித்திருக்கிறோம் இருந்தாலும் நம்மவரில் அநேகர் அந்நட்பைக்குறித்த கதைகளைக் கட்டுக்கதைகளாகவே நினைத்திருப்பார்கள். பஞ்சதந்திரம் கட்டுக்கதையேயாயினும் பிராணிகளுக்குள் இவ்விதமான நட்பு இருப்பது சகஜமே. பிராணிகளையும் அவைகளின் வழக்கங்களையும் பற்றி எழுதியவர்கள் இவ்விஷயமாய்ப்பலகதைகள் கூறுகின்றனர். தாமே கண்கூடாக்கண்ட விஷயங்களை அவர்கள் எழுதியிருப்பதால் அவ்விஷயத்தின் உண்மையை எவராலும் மறுக்கவொண்ணாது. அவற்றுள் சிலவற்றைக்கூறுவோம்.

ஆபிரிக்காவில் ஒருவகைப்பறவைகள் உண்டு. அவை எப்பொழுதும் ஆடுமாடுகளுடன் சஞ்சரிக்கும். அவ்வாறு சஞ்சரிப்பதற்குக்

காரணம் அவ்வாடுமாடுகளின் மேலுள்ள பூச்சிகளைத் தின்னத்தான். இப்பறவைகளுக்கு எருமைப்பக்ஷிகள் என்று பெயர். அவைகளை ஆடுமாடுகள் வெறுக்கிறதில்லை. சாதாரணமாய் மாடுகளின் மேல் காகம் குருவி முதலிய பறவைகள் உட்கார வரும்போது அம்மாடுகள் அவைகளை வெறுத்துக்கொம்பால் முட்டுவதும் வாலால் அடிப்பதுமாக இருப்பதை நாம் பிரதிதினம் பார்க்கிறோம். அவ்வாறு வெறுக்காமல் அத்தேசத்து மிருகங்கள் அப்பக்ஷிகளைத் தம்மேல் உட்கார விடுகின்றன. அப்பறவைகளும் பூச்சிகளால் அம்மிருகங்களுக்குண்டாகிய துன்பங்களை நீக்கிச்சுகத்தை உண்டுபண்ணுகின்றன. இப்பறவைகள் இம்மாதிரியான உபகாரத்தைக் காண்டாமிருகங்களுக்குஞ் செய்துவருகின்றதைக் கேட்கும்போது மிகவும் வியப்பாகத்தோன்றுகிறது. "எருமைமேல் நாரை துயில்வதியும் நாடா" என்று நாட்டின் சமாதானத்தைக்கூறுவது கவிகளின் வழக்கம். அதிசயமாகத்தோன்றும் இவ்விஷயம் சாதாரணவிஷயமாக ஆவது அபூர்வம். காண்டாமிருகங்களின்மேலுள்ள பூச்சிகளை இப்பறவைகள் கொத்திநிவர்த்திசெய்கிறதுமன்றி இம்மிருகங்களுக்கு காவல்தாரர்களாவும் உபயோகப்படுகின்றன. காண்டாமிருகங்களுக்கு ஏதாவது வேடர் முதலியவர்களால் அபாயம் நேரிடுவதாயிருந்தால் இப்பறவைகள் கூட்டமாய்க்கூச்சலிட்டுக்கொண்டு செங்குத்தாய் ஆகாயத்தின்மேல் பறந்து அம்மிருகங்களுக்கு எச்சரிக்கை கொடுக்கும். அம்மிருகங்களும் அக்கூச்சலைக்கேட்டவுடன் எத்திக்கினின்று அவ்விதஅபாயம் வருகிறதென்று கூடப்பார்க்காமல் ஓரே ஓட்டம்பிடித்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஆரம்பிக்கின்றன. சிற்சில சமயங்களில் அவை "அற்றகுளத்தில் அறுநீர்ப்பறவைபோல்" இல்லாமல் "அக்குளத்திற் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்போலவே ஒட்டியுறுவார்" போல அம்மிருகங்களை விடாமற் றொடர்ந்து அவைகளுக்கு உதவிசெய்யும். ஒரு சமயத்தில் ஒரு வேட்டையாளி தான் கண்கூடாக் கண்டத்தைப் பற்றிச் சொல்லுகிறதாவது :—

"நான் ஒரு சமயம் ஒரு காண்டாமிருகத்தை வேட்டையாடிய காலத்தில் இப்பக்ஷிகள் அம்மிருகத்தின் கூடவே தொடர்ந்து அதற்குப்பலமுறை தம் கூச்சலால் எச்சரிக்கை கொடுத்தன. நான் ஒவ்வொரு முறையும் சுடும்பொழுது விடாது அம்மிருகத்தின் முதுகி

னும் பக்கங்களிலும் உட்காந்து அம்மிருகத்தைக் காத்துக்கொண்டிருந்த அப்பறவைகள் பெருங் கூச்சலிட்டுக்கொண்டு ஆகாயத்தில் ஆறடி உயரம் பறந்துநின்று உடனே மறுபடியும் அம்மிருகத்தின் மேல் உட்காந்து மொய்த்துக்கொள்ளும். பலமுறை நான் சுட்டும் அவைகள் சிறிதும் அச்சமின்றித் தம் நண்பனுகிய காண்டாமிருகத்தைக் காப்பாற்றமுயன்றதேயொழியச் சிறிதும் அவை அஞ்சி அகலவில்லை. அவைகளின் நட்பின் திடத்தைப்பார்க்குங்கால் எனக்கு மிக்க வியப்புண்டாயிற்று." மானிடர் ஆறறிவுடையராயிருந்தும் ஐயறிவுடைய இப்பறவைகளின் குணத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பது மிக வியப்பே.

> "உடுக்கையிழந்தவன் கைபோல வாங்கே
> இடுக்கண் களைவதா நட்பு"

என்றவண்ணம் ஆபத்துக்காலத்தில் தூங்குகிற ஒரு முதலையினிடம் சென்று அம்முதலை தூங்கின கண்ணுடன் தன் வாயைமட்டும் திறந்துகொள்ளவே இப்பறவை அவ்வாய்க்குட்சென்று கொத்திற்று. முதலை உடனே வாயை மூடிக்கொண்டது. இரண்டு நிமிஷங்களுக்குப்பிறகும் அந்த முதலை மறுபடியும் வாயைத்திறந்தது. உட்சென்ற பறவை வெளிவந்து தண்ணீர் ஓரத்திற்செல்லக் காணப்பட்டது. இவ்விதம் அப்பறவை மூன்று நான்குமுறை செய்தது. ஒவ்வொரு முறையும் வெளிவந்தவுடன் தண்ணீர் ஓரத்திற்கு அது செல்லுகிறதைக்கண்டு ஆச்சரியமடைந்தேன். இம்மாதிரி இவ்வேடிக்கையைக்கண்டு களித்துச்சிறிதுநேரம் நின்றபின் நான் என் துப்பாக்கியை எடுத்துப்பறவையைச்சுட்டேன். முதலையைச்சுட்டால் பையில் அடைத்துக்கொண்டுபோதல் சாத்தியமான காரியமன்றென்று கருதி இப்பறவைகளில் இரண்டைச்சுட்டு வீழ்த்தினேன். முதலைவாய்க்குட் சென்றுவந்த பறவையையே சுட்டேனென்று நான் நிச்சயமாய்ச்சொல்லமுடியாது. நான் சுட்ட பறவைகளைப் பஞ்சு திணித்து என் கூடக்கொண்டுபோனேன். அவைகளில் ஒன்றை லீஸ்டர் காக்ஷிசாலையிலும் மற்றொன்றை என் கிருகத்திலும் காணலாம்" என்று கூறியிருக்கிறார். ஆகையால் இவ்வபூர்வ சிநேகம் மிகவும் கொண்டாடத்தக்கது. ஒரே ஜாதிப்பிராணிகள் கூட்டங்கூட்டமாய் நெருங்கி ஒற்றுமையுடன் வாழ்வதற்குப் பல திருஷ்டாந்தங்களுண்டு.

நீர் நாய்கள் ஒற்றுமையுடன் மரக்கிளைகளைக்கொண்டும் கல் மண்ணைக் கொண்டும் வீடு கட்டிவாழ்ந்ததையும் தென் அமெரிக்காவில்காட்டுக் குதிரைகள் கூட்டங்கூட்டமாய் வாழ்ந்து சுகம்பெறுவதையும் இன்னும் இவைபோன்ற மிருகங்களும் பறவைகளும் ஊர்வனவைகளும் கண்டோர் வியப்புறும் ஒற்றுமையுடன் வாழ்வதையும்பற்றி நாம் நன்கறிவோம். தேனீக்கூட்டத்தின் சீரும் சிறப்புமான வாழ்வைப் பற்றியும் அவைகளின் ஒழுங்கான ஏற்பாடுகளைப்பற்றியும் நாம் பல முறையும் படித்திருக்கிறோம். சுஜாதி விஷயத்தில் இது வியப்பாகாது. விஜாதி விஷயத்தில் இவ்வாறான நட்பு இருப்பது அற்புதமே. "யாருக்குத்தான் தெரியும் அவர் மகிமை யாருக்குத்தான் தெரியும்" இன்னும் எத்தனையோ அற்புதங்கள் இருக்கின்றன. அவைகளைப் ற்றிச் சமயம் வாய்க்குந் தோறும் எழுதுவோம்.

எஸ். சாமிநாதையபர்.

வந்தேமாதரம்.

இந்தியா.

(:o:)

இந்தியாவைப் பற்றி முற்பிரசுரத்திற் சிறிது பேசினும் அதைத் தொடர்ந்து மேலு மொரு சிறிது புகல ஆசை நம்மைக கவர்ந்து இழுத்ததினல் சுதேசத் தாயின்மாட்டு வைத்த அபிமானத் தோடு வெளிவந்தனம்.

சுதேசாபிமான சுசீலர்களே! ஆரிய சகோதரர்களே!! வந்தேமாதரம், சிந்தைகுழைந்து வந்தேமாதரம், சந்ததம் வந்தேமாதரம்.

இன்றுவரை நமது கண்களுக்கு முன்பாக அந்நியர் தன்னுடைய சர்வ ஐச்வர்யத்தையும் சம்பிரமமாக அநுபவிக்கத் தாழ்வடைந்து கஷ்டப்படுகிற நம் சொந்தத்தாயாகிய இந்தியாவை முற்றிலும் மறந்து, பூர்விகமான நம்முடைய கொழுமை குறைந்து, எடுப்பார் கைப் பிள்ளைகளாய் வறுமையடைந்து, பிறர்முகம் பார்த்துப் பிழைத்துப் பேதுற்றுப் பரிதவிக்கின்ற நிலைமைதான் இருந்தவாறென்னே!

என்னே !! ஐயையோ !!! நெஞ்சம் அழலிடைப்பட்ட மெழுகாய் உருகுகின்றதே இதுவும் ஈசன் திருவிளையாடல் போலும்.

நாளடைவில் ஜனங்கள் மிகப் பெருகிக்கொண்டே வருகிறார்கள். எல்லாத் தொழிலாளிகளுக்கும், எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும், எல்லா அரசர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேண்டிய வேண்டிய அளவு ஆகாரநிமித்தம் தானியங்களை விளைவித்துக் கொடுத்துக் கொண்டு வந்த கிருஷிகர்கள் தற்காலத்தில் பரமஏழையாயும், உடுக்க வஸ்திரமில்லாமலும் தங்கள் ஸ்திதியைச் சீர்ப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களாவது நம்பிக்கைகளாவது இல்லாமலும், அன்றன்று பொழுது போய் எப்போது மரணம் வந்து தங்களைக் கஷ்டத்திலிருந்து நிவிர்த்திக்கப் போகிறதோவென்று விசனத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியா பழையகாலத்தில் (1) ஆசியாகண்டத்துக்குரிய லக்ஷணங்கள் யாவையும் பொருந்தியதாயும், (2) கிருஷிகர்கள் சாகுபடிக்கு வந்ததுபோக அதிக மீதியான தரிசு நிலங்களை யுடையதாயும், (3) அதிக சாரம்பொருந்திய பூமியாயும், இருந்தது. இப்போதோ அந்நியர்கள் வேட்டையாடும் காடாய்விட்டது. உழுதுண்பவர்களுக்கு மேலதிகாரிகளா யுள்ளவர்களுடைய ஆதரவு சிறிதும் இல்லை. அச்சமுசாரிகளுக்கும்மற்றவர்களுக்குமோ ஒற்றுமை கிடையாது. இம்மட்டோ; இதை வியாபாரிகளிடத்தும் பெரும்பாலும் காணலாம். முற்காலங்களில் இங்கே எத்தகைய ஜனங்களிடத்தும் நேசமும், ஒற்றுமையும் குடியாயிருந்தன. இப்பொழுதோ பகையும் பிரிவினையும் உண்டாகி எங்கே பார்த்தாலும் தனித்தனி கோட்பாடுகளும், ஏற்பாடுகளும், சபைகளுந்தோன்றி ஒருமதத்தாருக்கும் மற்றொரு மதத்தாருக்கும், ஒருஜாதியாருக்கும் மற்றொரு ஜாதியாருக்கும் ஒரு குடும்பத்தாருக்கும் மற்றொரு குடும்பத்தாருக்கும், ஒரு சகோதரனுக்கும் மற்றொரு சகோதரனுக்கும், தகப்பனுக்கும் பிள்ளைக்கும் ஒரு நாட்டாருக்கும் மற்றொரு நாட்டாருக்கும் ஆகாமலிருக்கிறது. நம்முடைய முன்னோர்கள் சுதேசத்தைத் தங்கள் ஜீவன்களைப்போல நேசித்து, அதற்கு ஏதாவது அவமானம் அல்லது கெடுதிநேரிட்டால் மிகவும் வெட்கமடைந்து அதை விலக்குவதற்கு உயிரையும் கொடுத்தார்கள். இப்போதோ பேராசை, அழுக்காறு முதலிய பசாசுகள் நம்மைப் பிடித்து, மேன்மை தங்கிய முயற்சி யாதொன்றையுந்

செய்யவொட்டாமல் தடுக்கின்றனவே. வயிற்றுப்பாடானது நம்மை யிச்சகம் பேசுகிறவர்களாகவும், கோழைத்தனமும் துரோகச் சிந்தையும் உள்ளவர்களாகவும் ஆக்கிவிட்டதே. இந்தியாவினிடத்து அன்பு பாராட்டிக் கனம்பண்ணுகிற ஐரோப்பியர், அமெரிக்கர்களுக்கும், கௌரவமாயும் செழிப்பாயு மிருந்த நம்மைப் பார்க்க வெட்கமும் மனநோவு முண்டாகுமே.

அந்தந்தோ! அந்நாட்களில் மிகத்திரளான ஜனங்கள் வசிக்குமிடங்களாயும், பெருவாழ்வுக்கு மத்தியஸ்தானங்களாயும், பன்மார்க்க சாஸ்திரக் கிரந்தங்களுக்குக் களஞ்சியங்களாயும், ஸன்மார்க்கபோதக சித்தாந்த சாஸ்திரங்கள் உல்லாசமாயுலாவும் உப்பரிகைகளாயும் விளங்கிய மஹத்தான நகரங்கள் எண்ணிறந்தன இன்றைக்கு இடிந்து புழுதியாய்க் கிடக்கின்றன. அப்பாழ்களில் கோரமான விலங்குகளும், பிணந்தின்னிப் பக்ஷிகளுமே வசிக்கின்றன. அவைகள் இன்ன இடங்களில் இருந்தன என்பதுகூட மறந்தே போய்விட்டது. பூர்வகால வர்த்தமான நிர்ணய சாஸ்திரிகள் பூமியைத் தோண்டுகையில் சில வேளைகளில் மேலே சொன்ன நகரங்களைச்சேர்ந்த சாமான்களைக் கண்டெடுக்கிறார்கள். இவ்வஸ்துக்களும் பூர்வ ஆரிய சாசனங்களில் எழுதப்பட்டிருக்கும் சங்கதிகளை ஸ்திரப்படுத்துகின்றன. மேலும் இப்போது நிலைபெற்றிருக்கும் அநேக ஆலயங்களின் கற்சுவர்களில் வரையப்பட்டிருப்பவைகளை வாசித்து நிதானித்து யோசித்தால் பூர்வ காலத்து நிலைமை தெற்றென விளங்கும். அக்காலத்தில் மறையவர் அரசர், வணிகர், சூத்திராதி வருணத்தவர்களுக்குரிய தொழில்கள் நிச்சயிக்கப்பட்டிருந்தன. உண்மை யறிவு இதுதான் என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் பலவகைத் தொழிற்றுறைகளிலும் தத்தம் நிலைக்கேற்ப உணர்ந்திருந்தார்கள். தொழிலின் உண்மை இன்மைகளை அறிந்திருந்தார்கள். எவ்வகைச்சம்பத்தையும் எட்டுணையுங் குறைவுபாடின்றி யெய்திவந்தனர். சீதோஷ்ண சமநிலை, கிரிவனநதி அமைப்பு, நதநதியாதிகதிக்கிரமம், பஞ்சலோகங்கள், நவரத்தினங்கள். நவதானியங்கள், சமஸ்த மிருக பக்ஷியாதிகள், இத்தேசத்திற்போல வேறெங்கும் காணக்கிடையா. இதை முன்னிட்டன்றோ இத்தேசத்தின் மீது அநேக தேசத்தார் படையெடுத்து வந்திருக்கின்றனர்.

இகபரலாப சாதனங்களைப்படிக்கிரமமாக ஒழுங்குபெற அமைத்திருந்தது இத்தேசத்தன்றி வேறெங்குமில்லை. இவைகளுக்கு ஆதரவாயுள்ள கல்வி இவ்விந்துதேசத்திலேயே பிறந்து வளர்ந்து வந்தது அது இப்போது மாசு படிந்து ஒளிமழுங்கியிருக்கிறது. ஆனால் காலக்கிரமத்திற் சிறிதுசிறிதாக பூர்வமஹாப்பிரகாச நிலையை அடையும் போலக்காண்கிறது.

முற்காலத்தில் சூத்திராதியாகத் தொழுகுலத்தவரீறாகக்கல்வி, சாஸ்திரம் மதம் முதலியவைகளைக் கையாண்டு பாண்டித்ய மெய்திவந்தனர். தற்காலத்திலோ அவர்கள் கேவலமான அலுவல்களிலமர்ந்து உத்தியோகிக்கின்றார்கள். அவர்களுக்கு ஊடே ஊடே தான் சில சில சமஸ்கிருத திராவிட வித்துவான்களைக்காணலாம். ஆனால்அவர்களில் மிகுதியானவர்கள் தங்கள் வாழ்நாட்களை நூலாராய்ச்சி செய்வதற்கு வேண்டிய வழிகளில் செலுத்துவதற்கு ஆதரவு ஒன்றுமில்லாதது பற்றித் தங்கள் முன்னோர்கள் வழக்கத்தை விட்டுவிட்டபடியால், அவர்கள் மகிமை கெட்டுப்போய்விட்டது. முற்காலத்தில் ஆங்காங்கு கல்விக்கழகம், கைத்தொழிற்சாலை,வைத்தியசாலை,அன்னசாலை, முனிவர் வாசம் முதலியன ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இக்காலத்து அவைகளின் பொருள்களேமாறி யோனிமட்டிலும் தீனிமட்டிலுமேயாய் விட்டன. அதினால், நம்மவர்கள் இப்போது வேதாகமங்களை நம்புகிறதில்லை. நம்பினாலும் மேலெழுந்தவாரியாகவேதான். சகலகலா பாண்டித்யமடையும் ஆன்ம சிற்சக்தி அடங்கிக்கிடக்கிறது. அது கொஞ்சங் கொஞ்சமாக வெளியேறுங் காலம் வந்துவிட்டது. ஆயினும் இப்போது உதட்டுப்பாடமும், உரைஞானமுமே மலிந்து கிடக்கின்றன. நாஸ்திகயுத்தியோ விசேஷமாய் நடைபெற்று வருகின்றது. தேசக் கொள்கைகள், அநுஷ்டானங்கள், நடையுடைபாவனைகளும் சிறிது பேதப்பட்டிருக்கின்றன. ஊனையும், அவற்றுள் சேர்ப்பதே உஜிதம். ஜடம், ஆன்மா ஈசனிடத்து நம்பிக்கை குறைந்திருக்கிறது. நம்முடைய சாஸ்திரங்களை ஆதியோடந்தத் தீர்க்கமாகப் பரிசீலனை பண்ணாத தோஷமே இப்போது நம்மை வருத்தத்துக் குள்ளாக்குகிறது. கையில் உள்ள வெண்ணெயை எறிந்துவிட்டு நெய்க்கு அலைந்த கதையாய் முடிந்தது. பரிதாபம்! பரிதாபம்!!.

இந்துக்கள் தவிர மற்றெந்தக் கண்டத்தவர்களே யாயினும் ஒற்றைக்கண் குருடரும், இருகண்களும் ஒளிமழுங்கிச் சிறிதே பார்வையுடையவர்க ளென்றே சொல்லலாம். மற்றையருக்கு ஜடதத்துவ சாஸ்திரமும் கொஞ்சம் ஆன்மதத்துவ சாஸ்திரமுந் தெரியும். நாமோ ஜீவேச ஜடபதார்த்த வுண்மை தெரிந்தவர்கள். இருவிழிகளும் படலமறைப்பின்றிச் செவ்வனே தெரியப்பெற்றவர்கள். ஆயினுங் கையில் விளக்கைப்பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுந்து விட்டோம். சிலர் வெளியேறியும், நடுக்கிணறுவரை சிலர் ஏறியும், சிலர் தொத்திக்கொண்டு மிருக்கிறோம். வெளியேறினவர்கள் உள்ளே தொங்குபவர்களையும், முழுகிக் கிடப்பவர்களையும், தூக்கிக்கரையேற்ற வேண்டியது அவசியத்தினுமவசியமே. கோடீஸ்வரப்பிரபு தரித்திரனை கூலிக்காரனிடம் பிச்சை கேட்டகதையே நம்முடைய மாதிரி. பரதேசக்காற்று வீசச் சுதேசாபிமானக் குறைவு என்னும் வியாதியினால் பீடிக்கப்பட்டு மெலிந்து வாடிச் சோகைபற்றித் தள்ளாடி நிற்கின்ற நமக்குள் அத்துவிதமாய்த் தோன்றாத் துணையாயிருந்து உபகரிக்கும் இறைவன் கருணையினால் சில வைத்தியர்களைத் தோற்றுவித்திருக்கின்றனன். அது நாம் நம்முடைய சொந்தத் தாய் முலைப் பால் குடித்து வளர்வதற்கு ஏற்ற காலம் இது தான் என்று குறிப்பிடுகின்றது. திருவருள் மறக்கற்பாற்றன்று.

இரவும் பகலும் மாறி மாறி வந்துகொண்டேயிருக்கின்றன அதுபோலவே சுகதுக்கங்களும். எப்போதும் சுகானுபவத்திலேயே எல்லாச்சீவர்களுக்கும் நாட்டம். துக்கானுபவத்தை ஒருவரும் மனப்பூர்வகமாக விரும்புகிறதேயில்லை. ஆயினும் அது விட்டபாடில்லை நிழலருமை வெய்யிலிற்போனால்மட்டுமே தெரியும். சுகானுபவ விருப்பமும் துக்கம்மிகுந்த காலத்திலேயே தோன்றும். ஆனால் இவ்விரண்டிற்கும் வார்த்தைமட்டிலேதான் பேதம். சுகமாவது ஹிதத்தின் காரியமேயாகத்துக்கமாவது அஹிதத்தின் காரியமாகின்றது. ஒருவனுக்கு ஹிதமாயுள்ளது மற்றொருவனுக்கு அஹிதமாயும், ஒருவனுக்கு அஹிதமாயுள்ளது மற்றொருவனுக்கு ஹிதமாயும் காலம்பற்றித் தோன்றும். அதுவும் அவ்வச்சமயம்பற்றிய செயற்கை பேதத்தினாலேதான். ஒவ்வொருசெயலும் அநுகூலம்பயப்பின் நன்மையென்றும், பிரதிகூலம்பயப்பின் தீமையென்றும் சொல்லப்படும். அ

ந்நன்மைதீமை இரண்டிற்கும்பலன் முறையே புண்ணியமும் பாவமு மே. புண்ணியத்தாலாய சம்பத்துக்கு சுரசம்பத்து என்றும் பாவ த்தால் ஆய சம்பத்துக்கு அசுர சம்பத்து என்றும் சொல்லுகின்றன ர் பெரியோர். சுரசம்பத்தையடைந்தவர்களுக்குச் சாந்தம், கருணை, திருப்தி முதலியன உருவமாய் விளங்கும். அசுரசம்பத்துள்ளவர்க ளிடத்தோ அழுக்காறு, அவா, வெகுளி முதலியன குடியாயிருக் கும். தங்களுக்கில்லாதபொருள்மேல் நசையுண்டாதல் உலகிய ற்கை. அதுவும் பிறர் ஆக்கம்பார்த்து மேலெழும் மனப்பரபரப்பே அப்பரபரப்புக்கு வலியினிலாகிலும், மறைவினிலாகிலும், பலவித தந்திரத்தாலாகிலும் பிறர்பொருளை யடைதல்கூடும். அக்காலத்து ஊடே மாறுதல்கள் ஏற்படும். ஏற்படவே கலகம்விளையும். கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என்பது மூதுரையன்றோ? இது ஒவ் வொருவருக்கும் தினுனுபவமே. அக்காலத்து நடுவுநிலைமையுடை. யான் ஒருவன்தோன்றி நியாயவாதிபக்கல்நின்று கலகத்தைத் தீர்த் துக் கள்வரை வெருட்டிப் பறிகொடுத்தவரைப் பழய நிலையில் நிறு த்துதல் வழக்கம். சுரர் நலம்பறித்துத் துய்த்த சூரர் தங்கிளை வே ரோடுமாய ஆதிபகவன் அருட்சங்கற்பத்தால், சுரேந்திரநாதராய் அ ந்நாளில்வந்து இடுக்கண் களைந்த முருகப்பெருமான், இந்நாளில் நமது இடுக்கண்களைமாற்றுதற்கு கனந்தங்கிய பாபு சுரேந்திரநாத்பானர்ஜி அவர்களிடம் ஆவிர்ப்பவித்து ஆட்டுவிக்கின்றனர் போலும். இறை யருள் எய்தப்பெற்றார்க்கு இல்லாததொன்றில்லை; இயலாததொன்றி ல்லை. எல்லாம் இனிதுமுடியும். வந்தேமாதரம்! வந்தேமாதரம்!! வந்தேமாதரம்!!!

ஓ! இடையே சிலசங்கதிகளைச் சொல்லமறந்தோம். அவையா வன:—இந்துக்களுக்குள் கல்விப்பிவிருத்தி ஆக ஆக அவர்கள் கஷ்ட ங்களும் நீங்கிக்கொண்டேவரும். இங்கே இப்போது பரவியிருக்கு ம் சமாதானமும் இனி இடைவிடாது நிலைத்திருக்குமானால், ஜனங்க ளை ஒருவரோடொருவர் சேரவொட்டாமற் செய்கிற தடைகள் எடு பட்டுப்போகும். காச்மீரதேசம் திருவாங்கூரிலிருந்தும், கட்சுதே சம் பங்காளத்திலிருந்தும் எவ்வளவு தூரங்களிலிருந்தாலும், அவை களிலிருக்கும் ஜனங்கள் எல்லாரும் சகோதரர்கள் என்றறியத்துவக் கிவிட்டார்கள்.

இத்தேசத்திலுள்ள முப்பதுகோடி ஆட்களுக்கும் இந்தத்தீர்மானம் உண்டாகும்பொழுதுதான் இந்தியா சிலாக்கியம் அடையும் என்றைக்குக் கைத்தொழில்களினும் அவைகளைக்கற்பிக்கும் கலைகளிலும் இக்காலத்திலுண்டாயிருக்கும் பிரவர்த்தியோடு ஜனங்களுக்கு ஏராளமான வேலைகள் கிட்டுமோ; என்றைக்குப் பாடசாலைகள் ஆவலுள்ள மாணுக்கரால் நிறையப்படுமோ; ஆசாரம் முதலியவற்றைச் விடச்செய்ததான அவிசுவாசத்திலும் நாஸ்திகமதத்திலும் அறைகுறையாய் அர்த்தபுஷ்டியில்லாதசாஸ்திரங்களிலும் ஜனங்களுக்குவிருப்பம் குறையுமோ; என்றைக்கு நெடுநாளாய் மறைந்திருந்த அஞ்ஞானப்படலத்தைக் கிழித்து வேதாகமஞானம் ஒளிவீசிப் பிரகாசிக்குமோ; என்றைக்கு வடமொழி தென்மொழிப் பாஷாபிவிர்த்தி செய்து கொண்டாடப்படுமோ; என்றைக்கு இந்தியாவின் சகல பாகங்களும் குறைவின்றி புகைவண்டி, தந்தித்தபால் மூலம் இணைக்கப்படுமோ, என்றைக்கு இத்தேசத்தில் உலோகவிளைச்சலும் கிருஷியும் விருத்திசெய்யப்படுமோ; என்றைக்கு அந்தந்த ஜில்லாக்களிலுள்ள ஜனங்களுக்கு அந்தந்த இடங்களிலுண்டாகும் விளைச்சலும் தொழிலும் சமமாகுமோ; என்றைக்கு ஒருவரையொருவர் பார்த்துப் பேதமறப் பேசிக்கொள்ளக்கூடாத அடுப்பாங்கடை ஞானம் தொலையுமோ அன்றைக்குத்தான் பூர்வகாலத்து ஆரியர்களுடைய நாகரீகமும் முற்றிலும் திரும்பிவந்து சேர்ந்ததாகும். அன்றைக்குத்தான் உலகிலுள்ளோர் யாரும் ஆச்சரியமடைந்து வணங்கும்படியான பழைய ஞானமும் நன்மையும் மறுபடியும் வந்து பொருந்தும் அப்பேர்ப்பட்ட மகத்துவமுடைய நாளை நாம் எப்போது பார்ப்போம். விதிவசம் யாராலும் அறியவொண்ணுததே.

முடிவாகக் கூறுமிடத்து, உத்தியோகப் பைத்தியத்தைவிட்டு சுய நயப் பாம்பின்வாய்த் தேரையாகாமல், எல்லாரும் சகோதரவாஞ்சையோடு பிறர்க்கிடங்கொடாமல், ஊக்கங்குன்றுமல், "வந்தே மாதரம்" என்ற மகாமந்திரத்தின் பொருளை நன்றுய் உள்ளத்துறுதி பெற நிறுத்தி தற்காலத்தைமட்டும் சிந்தித்தலேபோதும். தற்காலத்திலிருந்தேவருங்காலம் ஜனிக்கிறது. வந்தேமாதரம்.

பு. நா. சொக்கலிங்கம்

சிவமயம்.

நாகமலைமாலை.

காப்பு.

சேலாங்கண் வள்ளியுடன் றெய்வமா தங்கமிவர்
மாலாரு நாக மலைக்குகன்மேற் பாமாலை
நாலாறே ராறுகவி நானுரைக்கத் தென்சேறை
மேலான முத்தி விநாயகன்பூந் தாட்டுணையே.

மாலை.

பூமாது சிந்தையினைப் போது மகிழ்மருகா
கோமா னெனுங்கட் குறமா னணைகடப்பந்
தாமாகு காமுருகா சண்முகநா தாவருள்செய்
நாமான் வளர்சேறை நாகமலை வேலோனே. (௧)

வானவர்மின் னார்களத்து மங்கலநா ணென்றுமுறத்
தானவரை வெற்றிகொண்ட சண்முகநா தாதினமுன்
றேன்மருவு கஞ்சமலர்ச் சேவடியைப் போற்றவருண்
ஞானவர தாசேறை நாகமலை வேலோனே. (௨)

உற்றா ருடன்பிறந்தா ரோதுமன்னை தந்தையுடன்
மற்றா ரிருந்தும்பம வாதனையை மாற்றுதற்குச்
சற்றேனு மாகாதென் சாமிநீ தஞ்சமென்றுன்
னற்றாளைப் போற்றுகின்றே னாகமலை வேலோனே. (௩)

கோவால மின்னார்கள் குக்கியுந்தண் ணாலமென்று
பாவா லுரைத்தீயார் பாலடுத்து வாடுகின்றேன்
தேவா லயந்தொறுநின் சேவடியை யெஞ்ஞான்று
நாவார வாழ்த்தவரு ணாகமலை வேலோனே. (௪)

பொய்யுரைப்போ ரைக்காணிற் போயவர்க்கு முன்னிருப்பேன்
மெய்யுரைப்போ ரைக்காணின் மேவலொன் றெண்ணுகின்றேன்
ஐறயலரைத் தெய்வமென்று சாற்றுவனா னுய்வதென்றோ
ணையுமிடை வள்ளிபங்கா நாகமலை வேலோனே. (௫)

ஈன்றீன்று தாய்சலித்தா ளேமனுமே கால்சலித்தான்
றோன்றியிந்த மெய்யைச் சுமந்தடியே னுஞ்சலித்தேன்
சான்றோர் வெறுத்திடுமிச் சங்கடத்தை மாற்றுதற்கு
நான்றுணிவாய்ப் போற்றுகின்றே னாகமலை வேலோனே. (௬)

சேலாங்கண் மாதர்மயற் சிந்துவுக்குள் ளேபுகுந்து
மாலா யலைவதனை மாற்றியருள் செய்வதென்றோ
வேலா குகாவெனவே வேண்டியிறைஞ் சன்பருக்கு
நாலாம் பதவிதரு நாகமலை வேலோனே. (எ)

கன்னு குமணு கனவிசையா வென்றுலுத்தர்க்
கென்னு லியன்றவரை யெத்தனையோ பாடல்களை
யிந்நாள் வரையுரைத்த வெல்லாம் பொறுத்தருள்செய்
நன்னு வலர்புகழு நாகமலை வேலோனே. (அ)

பெண்பா லடுத்தடுத்துப் பித்தேறும் பேய்மனத்திற்
பண்பாகக் கோடியிலோர் பங்கெடுத்துன் பாதம்வைத்துக்
கண்பாரொன் றோதாத காமுகனைச் சேராம
னண்பா யெனக்கருள்செய் நாகமலை வேலோனே. (கூ)

மண்ணாசை பெண்ணாசை மக்கள்பொன்மே லாசையினை
யெண்ணா துனைப்பரவ வெத்தனையோ சொல்லினுமென்
கண்ணா மனந்திரும்பக் காணே னருள்புரிவாய்
நண்ணாரை வெற்றிகொண்ட நாகமலை வேலோனே. (க0)

ஓமெனுஞ்சொற் குட்பொருளை யோதறியா நான்முகனைச்
சேமமுறக் குட்டிச் சிறையில்வைத்தாட் கொண்டவவிப
பாமரனைக் காக்கும் பரமுனக்கே தேவர்களை
நாமுறச்செய் சூரனைவென் னுகமலை வேலோனே. (கக)

பந்தாங் குயமடவார் பாலடுத்த காமுகனென்
றெந்தா யெனைவெறுக்கி லெத்தனையோ வேடமுற்றுத்
தந்தா யிடைக்குறமின் றாள்பணிந்த தோதுவன்யா
னந்தா வளச்சேறை நாகமலை வேலோனே. (கஉ)

அன்னைநீ யப்பனுநீ யாண்டவனீ யென்றுதொழு
மென்னைநீ யாளா திருப்பதற்கு ஞாயமுண்டோ
செந்நெலொடு கன்னல் செறிந்துவளர் சேறையினி
னன்னயமா வந்துதித்த நாகமலை வேலோனே. (கங)

அல்லார் குழன்மடவா ராடலினு மூடலினு
முல்லாச மாயமுத முண்டுறங்கும் வேளையினு
மெல்லா முனதுசெய லென்றிருப்பே னைப்புரப்பாய்
நல்லார் தினம்பரவு நாகமலை வேலோனே. (கச)

வஞ்சகம்பொய் சூதுகொலை வாஞ்சைகள வத்தனைக்கு
மஞ்சியுன்றன் பாதமிசை யன்புவைத்துப் போற்றாத
நெஞ்சனிவ னென்றென்னை நீகைவிடிற் காப்பவரார்
நஞ்சணிகண் டத்தன்மைந்தா நாகமலை வேலோனே. (கரு)

வன்னேர் முலையார் மயற்பரவைக் குள்ளழுந்தி
யென்றோ முங்கவலை யெய்தாதுன் சந்நிதியின்
முன்னேவந் தேத்தாத மூடனையுங் காப்பதற்கு
நன்னேயம் வைத்தருள்வாய் நாகமலை வேலோனே. (கசு)

ஆதரவா முன்றளிக ளத்தனையுங் கல்லவற்றுன்
பாதமிதித் துத்தழும்பு பட்டதனு லப்பதமிப்
போதெனகம் வைத்தாற் பொறுதென்றெண் ணுதருள்வாய்
நாதா குகாகுமரா நாகமலை வேலோனே. (கஎ)

வாடா மலரொடுத்துன் வார்கழற்காற் றாவியுன்னைப்
பாடாத நாவாற் பலன்பெறுவ தெந்நாளோ
கூடா வசுரர்களைக் கொன்றுபயந் தீர்த்தமரர்
நாடாள்வா னைப்புரந்த நாகமலை வேலோனே. (கஅ)

கற்றறிந்த பேரிடம்போய்க் கந்தவுன்சீர் கேளாமற்
சிற்றறிவான் மூவாசைச் சேற்றில்விழுந் தெய்த்தேனிக்
குற்றமெலா நீக்கிக் குணப்படுத்தி யாள்வதென்றோ
நற்றவத்தர் சூழ்சேறை நாகமலை வேலோனே. (கசு)

காலா யுதம்பிடித்த கையானை யஞ்சலியார்
போலார் புலையர் புவியிலெனப் போற்றுவன்கா
மேலான கும்பனுக்கு வேதமுட னுகமங்க
ளாலா று நாலுமரு ளுகமலை வேலோனே. (உ0)

அந்நா ளசுரர்கிளை யத்தனையும் வேரறுத்துப்
பொன்னுடு காத்ததுவும் பொய்யிலைமெய் யாமாயி
னிந்நாளென் மெய்ப்பிணிக ளெல்லாம் விலக்கியரு
ணன்னுவ லோர்புகழு நாகமலை வேலோனே. (உக)

ஈயா வுலுத்தர்களை யேபுகழ்ந்துன் சீர்த்தியினை
வாயார வாழ்த்தி வணங்கிலேன் வந்தடுத்தேன்
தாயாகும் வள்ளி தழுவுந் தருவேயிந்
நாயேனை யாண்டருள்வாய் நாகமலை வேலோனே. (உஉ)

கைச்சரசஞ் செய்புமின்னார் காமநலங் கைச்சரச
மிச்சையுற லாகாதென் றெண்ணி யுனையடைந்தேன்
பச்சைமயி லேறிவந்து பார்த்தறியச் செய்தருள்வாய்
நச்சரவஞ் சூடிமைந்தா நாகமலை வேலோனே. (௨௩)

வாயிருந்தும் வாழ்த்தாமல் வண்கையுற் றும் போற்றாமற்
றாயமெய்யுற் றுன்கோயிற் சுற்றாமற் கேள்வியுற் றுன்
பாயபுகழ் கேளாமற் பண்ணியிவை யெல்லாமிந்
நாயினுக்கென் றேபடைத்தாய் நாகமலை வேலோனே. (௨௪)

புற்சரும மாற்றுபெற்றப் போர்வையைமேற் கொண்டுவெகு
துற்செயலைச்செய்வதுபோற் றேன்றுமெனையாளனுஞ்சொற்
கற்செவியோ கேளாமற் கைவிடிலென் செய்குவன்யா
னற்குறமின் றுண்மருவு நாகமலை வேலோனே. (௨௫)

ஆத்திரமாப் போற்றுவர்மே லன்புவைத்த கந்தாவென்
காத்திரமெல் லாம்வருத்துங் கால்வலியுங் கைவலியுந்
தீர்த்தருள்வை யேலுன் றிருப்புகழை யெப்பொழுது
நாத்தழும்பத் தோத்திரிப்பே னாகமலை வேலோனே. (௨௬)

தாய்கலவிக் காசையுற்றுத் தந்தையையுங் கொன்றமகா
தீயனையுங் காத்தபிரான் செல்வனீ யென்பதனால்
வாயதனா லுன்சீர் வழுத்தா திருக்குமிந்த
நாயினையுங் காத்தருள்வாய் நாகமலை வேலோனே. (௨௭)

தக்கசிவ பூசையினைத் தான்புரியுங் கீரனுன்மேற்
பக்கம்வர வன்னாட் பயப்படுத்தி யாண்டதனா
லக்கணையுற் றுத்துதிக்கு மன்பரையெல் லாந்துதிப்பேன்
நக்கனருண் மைந்தாபொன் னாகமலை வேலோனே. (௨௮)

வற்றுதலு றுக்கருணை வாரிதிநீ யென்றுனது
பொற்றுணைக்கால் போற்றிப் புகழும் படியருள்வாய்
கற்றவர்க்குக் கற்பகமே கன்னியென தன்னையெனு
நற்றவம்பெற் றுள்குமரா நாகமலை வேலோனே. (௨௯)

கார்வாழி யெந்நாளுங் கம்பளத்தார் வாழ்பேறைப்
பார்வாழி சேறைப் பதிவாழி யுன்கருணைச்
சீர்வாழி மேலாந் திருப்புகழா லுன்றுதிசொன்
னார்வாழி வாழிசைவ நாகமலை வேலோனே. (௩0)

நாகமலைமாலை-முற்றிற்று.

சிவாலய தரிசனவிதி யுரை.

குருவணக்கம்.

பெத்ததசையிற் பதிபசுவாம் பேசும்பசுவும் பாசமதாம்
முத்திதசையின் மலமுயிர்க்குண் முன்னுமுயிரும் பதிக்குள்ளாம்
இத்தந்திரத்தை யுத்தமர்கட் கிதமாவுணர்த்தித் துறைசையமர்
சித்தன்குரு சுப்பிரமணிய தேவன்மலர்த்தாள் சிரத்தணிவாம்.

(இதன்பொருள்.) ஆன்மாமலத்தோடு கட்டுண்டுகிடக்கும் பெத்த நிலையில் பதி பசுவிலும், நூல்களில் எடுத்துக்கூறும் பசுக்கள் பாசத்திலுமடங்கிப் பாசமே முற்பட்டு விளங்கும். ஆன்மா மலத்தினின்றும் விடுபட்ட முத்திநிலையில் மலம் உயிர்க்குள்ளும், உயிர் பதிக்குள்ளுமடங்கப்பதியேமுற்பட்டுவிளங்கும். இவ்வுபாயத்தை உத்தமமாணாக்கர்களுக்கு இதமாக அறிவித்துத் திருவாவடுதுறையென்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஞானமூர்த்தியும், சுப்பிரமணிய தேவருமான ஆசாரியரது திருவடித்தாமரை மலர்களைச் சிரசில் அணிந்துகொள்வாம் யாம் என்க. யாம் என்னும் எழுவாய் தொக்குநின்றது. (கா)

கடவுள்வாழ்த்து முற்றியது

நூன்மரபும், அவையடக்கமும்.

ஏறுசிவ புராணமுத லாமவற்றின் மறைவுற் றிலகுசிவாலய தரிசன விதிதனைச் சைவர், தேறியுய நூலுணர்வு மேலுணர்வு சாலுஞ் சீலமுறுமாறுமுக நாவலனார்தெளித்துக், கூறுபுரிகத்தியத்தைப் பத்திமையாப்பெரிதுங் கொண்டெண்மைப் பத்தியத்திற் பிறர்நகைக்கப் பேசா, வீறுநிலவடவியிடைச் சுகமாருஞ்சுகங்கள் விள்ளுவன விள்ளுமெனு முனாவிளக்கினேனால்.

(இதன்பொருள்.) உயர்ந்த சிவபுராண முதலானவற்றில் மறைந்து விளங்கும் சிவாலய தரிசனவிதியைச் சைவர்கள் தெளிந்து உய்யும் பொருட்டு இயற்கை யறிவோடு செயற்கையான நூலுணர்ச்சியினுஞ்சிறந்து விளங்கும் ஆறுமுகநாவலர் தெளிவு படுத்திக்கூறிய வசனத்தை அன்போடு மிகவும் ஏற்று எளிமையான செய்யுணடையில் பிறர் நகைக்கும்படிகூறி உயர்ந்த பூமியிலுள்ள வனத்தில் சுகமாகத்

தங்கிய கிளிகள் சொல்லியவற்றைச் சொல்லுமென்னும் பழமொழியை விளக்கினேன் என்க. (கச)

பாயிரமுற்றியது.

ஆகச்செய்யுள் (கரு)

நூல்.

சிவபெரு மானே யநாதியா முத்த சித்துரு வாமுதற் றேவென்
றவமற நிதானித் தவனுரைத் தருள்வே தாகம விதிப்படி தத்தம்
நவமுறு வருண நிலைகளுக் கேற்ப நண்ணுமெய் யன்பொடு மவனைத்
தவறற வழிபா டியற்றுநர் சைவ சமயிக ளெனச்சொலுந் தரத்தோர்.

(இதன்பொருள்.) சிவபெருமானே! அநாதிமுத்த சித்துருவாகிய முதற்கடவுளென்று குற்றமற நிதானித்து அவன் திருவாய்மலர்ந் தருளிய வேதாகமவிதிப்படி தங்கள் தங்கள் வருணாச்சிரம தருமங்களுக்கு இசைய மெய்யன்போடும் அச்சிவபெருமானைக் குற்றமற வழிபாடுசெய்கின்றவர்கள் சைவசமயிகளென்று சொல்லுந் தன்மையுடையவர்கள்.

சிவபெருமானே அநாதி முத்த சித்துருவாகிய முதற் கடவுளென்று குற்றமற நிதானித்தலாவது எப்படியென்னில்? சங்கார காலத்தில் பிரமா, விட்டுணு, இந்திரன், மற்றத் தேவர்கள் முதலிய ஆன்மகோடிகள் யாவரையுஞ்சங்கரித்துத் தான் ஒருவனே அழிவின்றி நின்று, பின்பு முன்போலவே யாவரையுந் தோன்றச்செய்து காக்கின்றவன், அவனே யாதலானும், பிறப்பு இறப்பு இல்லாதவனாகலானும், எள்ளில் எண்ணெய்போலவும், மணியில் ஓசைபோலவும், மலரில் வாசம்போலவும், உலகமெங்கும் உள்ளும்புறம்புமாகி வியாபித்து விளங்குகின்றவன் அவனே யாகலானும், வேதமுதலிய கலைகளை ஆன்மாக்களிடத்துவைத்த கிருபையினாலே திருவாய்மலர்ந்தருளினவன் அவனேயாகலானும், வேதத்தில் சிவபெருமான் ஒருவனையன்றி மற்ற விட்டுணு முதலிய தேவர்களைக் கடவுளென்று உயர்த்திக் கூறுதல், உபசாரமேயன்றி உண்மையன்றாகலானும் யாதொரு பொருளை யாவர் வணங்கினும் அவ்வணக்கம் சிவபெருமானையேயடையும்.

வேதங்கள் கூறுகின்ற கீர்த்திகளெல்லாம் எல்லாநதிகளும் கடலிற்சென்று பொருந்தினாற்போலச் சிவபெருமானையேயடையு மாத

ளானும், எல்லாவற்றையும் தோற்றுவித்துக் காத்துச்சங்கரித்து மீள த்தருகின்றவரும், உயிர்களுக்கு அருளைநல்கி ஆளுநாயகரும், அந்த மில்லாதவரும், யாருமறியவொண்ணுச் சோதிரூபமா யுள்ளவரும், தேவர்களுக்கெல்லாந் தேவரும், உயிர்களுக்குள் நீங்காது விளங்குகின்றவரும், யாக்குஞ் சான்றாய் நிற்கின்றவரும், தனக்கு உவமை வேறொன்று இல்லாதவரும், பிரம விஷ்ணுக்களால்காணப்பெறுது விளங்குகின்றவரும்,யார்யார் எதைஎதை விரும்புகின்றார்களோ அதை அதை அளிக்கின்றவரும், உயிர்களுக்கெல்லாம் பதியாய்விளங்குந் தன்மையால் பசுபதியென்னு நாமங்கொண்டவரும், பிரமவிஷ்ணுக் களுக்குத் தான் மேலானவர் என்பதை யாவருக்குங் காட்டும்பொருட்டு அவர்களைச்சங்கரித்து அவர்களுடைய சாம்பர் என்பு முதலிய வைகளை அணிந்து கொள்ளுகின்றவரும், எவரையுந் தன்னுடைய குணத்திலொடுக்கி அவர்களுக்கெல்லாம் பற்றுக்கோடாகிநின்று அவர்களுடைய குணங்களில் புகாதவரும், அச்சிவபெருமானே யாதலானும், அவனே அநாதிமுத்த சித்துருவாகிய முழுமுதற்கடவுள் என்று நிதானித்து வழிபாடுபுரியவேண்டும். இன்னமும் வேதமானது ஒருவன் முத்தியைவிரும்புவனுயின் விட்டுணு முதலிய தேவர்களை யெல்லாநீக்கிச்சிவபெருமானையேபூசித்து முத்தியைப்பெறவேண்டும். அவனே முத்தியைக்கொடுக்கு மாற்றலுடையவன். அவனையின்றி வேறொருகடவுளைக்குறித்து மலத்துயரைநீக்கி முத்தியை யடையவிரும்புதல், ஆகாயத்தின் தோலையுரித்துப் போர்த்துக்கொள்ள நினைத்தல்போலாம் என்று முறையிடுமானல் அன்பர்களே? சிவபெருமானே பரம்பொருளென்பதற்கு வேறொரு சாட்சியும் வேண்டுமா?

விட்டுணுவைப் பிரமதேவனை இந்திரனை மற்றைத்தேவர்களைப் புகழ்ந்துரைக்கும்வேதம், சிவபெருமானைத் துதித்ததன்மைபோலத் துதித்ததோ இல்லை. மற்றைத் தேவர்களைத் துதித்தது உபசாரம் என்பதை எல்லாருக்குந் தெரிவிக்கும்பொருட்டு வேதத்தின் முன்னும் மத்தியினும் பின்னும் மற்றைத்தேவர்களை விலக்கின.

வேதமானது ஓர்பாகம் சிவபெருமானுடைய பெருமையையும் மற்றொருபாகம் மற்றை விட்டுணுமுதலிய தேவர்களையுந் துதித்தது இது சத்தியமே.

காந்தத்தில் பிரமதேவர் தக்கனைப்பார்த்துக் கூறும் வாக்கியம்.

"ஹே தக்கனே? நம்மையும் சிவபெருமானைப்போல நினைத்துச் சிறப்பினைச்செய்யுங் கொடியமனத்தை யுடையோர், கொடியநரகத்தில் விழ்வார்கள். அந்நரகம், அவர்களை ஒருநாளும் எடுத்தலைச் செய்யாது நம்மோடுசமத்தன்மை கூறுகின்றோரும், நம்மையுந்துக்கசாகரத்தில் விழ்விக்குந் தன்மையுடையவர்களாவார்கள். சிவபெருமானுக்கு அன்பர்களென்றுஞ், சிவபெருமானுடைய திருவடித்தொண்டைப்புரிந்து வாழுந் தேவர்களென்றும் நம்மைத்துதிக்கின்றவர்களுக்கு மாத்திரம் அனுக்கிரகம் பண்ணுவோமேயன்றி மற்றவர்களைப்பகைவர்களாக எண்ணியிருப்போம்.

பதி அரனே யென்றும், நாமெல்லாம் பசுக்களென்றும் வேதங் கூறும். இவ்வுண்மையைத் தெளியவேண்டினால் ஒன்று சொல்லுகின்றேன் கேட்பாயாக.

இவ்வரசாட்சியை நாம்பெறும்பொருட்டுச் சிவபெருமானுடைய திருவடிகளைப் பூசைசெய்த ஆலயங்கள் பலவற்றையுங் காண்பாயாக. அச்சிவபெருமானுடைய திருவருளைப் பெறாது முத்தியடைந்தவர்கள் ஒருவருமில்லை. அச்சிவபெருமானுடைய திருவருளின்றி வாழுந் தேவர்களுமில்லை. அச்சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றால் அடையக்கூடாத அருமையான பொருளுமில்லை. இதுசத்தியம். அவனைத்தவிர கடவுள் வேறொருவரும் இல்லை சத்தியம். ஆதலால் அவனுடைய திருவடிகளை அடைக்கலமாகப்பற்றக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

ஆதலால், அன்பர்களே? சீக்கிரம் அச்சிவபெருமானுடையதிருவடிகளைப்பற்றி நன்மையைப்பெறவேண்டும்.

பிரமதேவர் வாக்கியம்.

பரசிவனுணர்ச்சியின்றிப் பல்லுயிர்த்தொகையுமென்றும்
விரவியதுயர்க்கீறெய்தி வீடுபேறடைதுமென்ற
லுருவமில்விசும்பிற்றோலை யுரித்துடுப்பதற்கொப்பென்றே
பெருமறையியம்பிற்றென்னிற் பின்னுமோர்சான்றுமுண்டோ.

அன்றியுமொன்றுகேண்மோ வம்புயனுதியாக
நின்றவர் தம்மையேயல்லா நீக்கியச்சிவனென்றுள்ள
வொன்றெருமுதல்வன்றனே யுய்த்திடுமுத்திவேண்டி
னென்றுமஃதியம்பிற்றென்னின் யாவரேதேவராவார்.

நம்மையும்பரமென்றுன்னி நாதனிற்சிறப்புச்செய்யும்
வெம்மைகொணெஞ்சர்கிரா விழுமவெங்கிரயம்வீழ்வர்
தம்மையஃதெடுத்தல்செய்யா சமமெனப்புகல்கிற்போர்க
ளெம்மைபுந்துயரபென்னு மிருங்கடற்படுப்பரன்றே.

கானுறுபுலித்தோலாடைக் கண்ணுதற்கடவுட்கன்ப
ரானவரொன்றுமன்னூற் கடித்தொழில்புரிந்துவாழும்
வானவரொன்றுமெய்ம்மை வழுத்தினர்க்கருள்வோமல்லா
லேனையர்தம்மைத்தெய்வென் றெண்ணியேயிருத்தும்யாமே.

பதியரன்பாசந்தன்னிற் பட்டுழல்பசுநாமென்றே
விதியொடுமறைகள்கூறு மெய்ம்மையைத்தெளியவேண்டி
னிதுவெனவுரைப்பன்யாங்க ளிவ்வரசியற்றவீச
னதிர்கழலருச்சித்தேத்து மாலயம்பலவுங்காண்டி.

அவனருள்பெறுதமுத்தி யடைந்தனரில்லையல்லா
லவனருளின்றிவாழு மமரரும்யாருமில்லை
யவனருளெய்தினெய்தா வரும்பொருளில்லையானை
யவனலதிறைவனில்லை யவனேநீயடைதியென்றான்.

இன்னமும் வேதத்தில் சிவபெருமானைப் பிராமணனென்றும், விட்டுணுவை க்ஷத்திரியனென்றும், பிரமாவை வைசியனென்றும், இந்திரனைச் சூத்திரனென்றும் படிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வுண்மைகளை உணராது இக்காலத்தில் சில பிராமணர்கள் சிவபெருமானை யிகழ்ந்து கூறுகின்றார்கள். ஐயோ இது என்னபாவம்.

சிவதத்துவ விவேகம்.

வேதியர்குலத்திற் பிறந்தவர்தமக்கு விசேடமாயிக்கலி யுகத்தில்
வேதநீதெய்வ மெனப்புராணங்கள் விளம்பவுமன்பினு லுன்றன்
பாததாமரையை வழிபடாதேனைப் பண்ணவர்தமைவழிபடுவோர்
பாதகமறையோர் மூடர்களவர்க்குப் பயன்றராபரதெய்வங் களுமே.

வியாழபகவான் திருவாக்கு.

பிராமணனீயே கடவுளர்தம்முட் பிஞ்ஞகாவேனையர் தம்முட், பிராமணன்யானே பிராமணன்றனக்குப் பிராமணன்கதியுனை யிகழ்வோன், பிராமணனல்லன் றன்குலதெய்வம் விண்டுபின்னென்றனைத் தொழுமப், பிராமணற்கிரண்டும் பயப்படாநிரையம் புகுவனென்றுயர்மறை பேசும். (ஆதலால்,)

இப்படிப்பட்ட உண்மையை விசுவசித்துச் சிவபெருமானை வழிபடுகிற மார்க்கஞ் சைவசமயம். பலரைப் பரம் என்றுகொண்டு வணங்குகிற சமயம் சைவசமயம் ஆகாது. சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டு என்றுவது, சிவபெருமானுக்குச் சமத்துவம் உடையவர் உண்டு என்றுவது கொள்வது சிவத்துரோகம்.

சிவபெருமானின் வேறுகாத இரக்கமே சிவசத்தி. அவ்விரக்கம் உயிர்களுக்கு மலத்தைநீக்கிச் சிவானந்தத்தைக் கொடுத்தற்கணுளதாகிய இரக்கம். அது ஈசுவரனுக்கு அநாதியேயுள்ளது. இரக்கமும், அவனும், குணமுங் குணியுமாகலின், அவ்விரக்கமும்: முதல்வனையின்றி யமையாது. முதல்வனும், அதனையின்றி யமையான். அந்தஇரக்கமே, பார்வதி தேவியார் என்று சொல்லப்படும். சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டுக் கொண்டருளிய மூர்த்தங்களான விநாயகக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள் இவர்களுக்குச்செய்யும் வணக்கம், சிவபெருமான் ஒருவனைக்குறித்த வணக்கமேயாம்.

முப்பத்துமுக்கோடி தேவர்களைப் பரம் என்றுகொண்டு வணங்குகிறமார்க்கஞ் சைவசமயம் என்று மூடர்பலர் சொல்லுகின்றார்கள். மனிதர்களைப்போலவே பிறந்தும் இறந்தும் உழலுகிற தேவர்களைப் பரம் என்று கொள்வது சைவசமயத்துக்கு முற்றும் விரோதம்.

சைவசமயிகள் என்று பெயர் இட்டுக்கொண்டு, அனேகர்கள் உயிர்ப்பலி ஏற்கிற துட்டதேவதைகளையும், காடன் மாடன், சுடலை மாடன், காட்டேறி, மதுரைவீரன், கறுப்பன், பதினெட்டாம்படிக் கறுப்பன், சங்கிலிக்கறுப்பன், முனி, கண்ணகி, பேய்ச்சி முதலான பிசாசுக்களையும் வணங்குகின்றார்கள். அனேகமனிதர்கள் மகமதியரு

டைய பள்ளிவாயிலைச் சேவிக்கின்றார்கள். இவர்கள் எல்லோரும் சிவத்துரோகிகள். ஐயோ சிவத்துரோகம் பொல்லாது. பெறுதற்கு அரிய மனிதப்பிறவியைப்பெற்றும், மிகமேலாகிய சைவசமயமரபிலே பிறந்தும், சைவசமயம் இப்படிப்பட்டது, அந்தச் சமயக்கடவுள் இப்படிப்பட்டவர், அவரை வழிபடுகிற முறைமை இப்படிப்பட்டது என்று ஆராய்ந்தறிந்து கொண்டு, சைவசமயத்தை அநுட்டியாது நேர்ந்த நேர்ந்தபடி நடப்பது ஐயையோ நரகத் துன்பத்துக்குக் காரணமே. சிவனை வழிபடுவோர் சைவரெனப்படுவர்.

உலகத்தில் விபூதி தரிப்பது மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று அநேகர் என்னுகிறார்கள். விபூதி தரிப்பது, மாமிசம் புசியாது விடுவது, இந்த இரண்டு மாத்திரமே, சைவசமயிக்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகின்றார்கள். விபூதி தரிப்பது, மாமிசம் புசியாது விடுவது, மாமிசம் புசிக்கின்றவர் காணுமற் போஜனஞ்செய்வது இந்த மூன்று மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகின்றார்கள்.

சைவசமயிக்கு உரிய முக்கிய இலக்கணங்களாவன:—

(க) கொலை, களவு, கள்ளுண்ணல், மாமிசம் புசித்தில், பிறர் மனைவியை விரும்புதல், பொய், பிறர்க்குத் தீங்குநினைத்தல், பொறாமைப்படுதல், கோபம், கடுஞ்சொற்கூறல், பயனில்லாச் சொற்கூறல், பிறரைக் காணுதவிடத்து இகழ்ந்துபேசுதல், சூதாடுதல், பிறர் பொருளை அபகரிக்க நினைத்தல் முதலான பாவங்களை மரணபரியந்தம் விலக்கி நடப்பது.

(உ) உயிர்களுக்கு இரங்குதல், மெய்பேசுதல், வறியவர்களுக்கு ஒருபிடி அன்னமாவது கொடுத்தல், செய்ந்நன்றியறிதல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, இனியவை கூறல், அன்புடைமை முதலான தருமங்களை மரண பரியந்தம் பாதுகாத்து நடப்பது.

(௩) பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியாயர், குரு, இராசா. முதலான பெரியோர்களை மரணபரியந்தம் உபசரிப்பது.

(௪) சிவ தீக்ஷைபெற்றுக் கொள்வது.

(கு) விபூதி ருத்திராக்ஷந்தரிப்பது.

(௬) சந்தியாவந்தனம், சிவத்தியானம், பஞ்சாக்கரசெபம், தேவார திருவாசக பாராயணம் இவைகளை மரணபரியந்தம் தினமும்பத்துநிமிஷமாவது மனத்தை ஒடுக்கி விதிப்படி அன்புடன் செய்து முடிப்பது.

(எ) விசேடதீக்ஷைபெற்றுச் சிவலிங்கபூசையைமரணபரியந்தம் செய்து முடிப்பது.

(அ) நித்தமுமாவது அல்லது புண்ணிய காலங்களிலாவது ஆலயத்திற்குச் சென்று சிவலிங்கப் பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ்செய்து வணங்கித் துதிப்பது.

(கூ) பெரிய புராணம், திருவிளையாடற் புராணம். காஞ்சிப்புராணம், காந்தபுராணம் சைவசமயநெறி, நித்தியகன்மநெறி, சிவதருமோத்திரம் முதலான நூல்களை வாசித்தாவது கேட்டாவது அறிந்து போற்றுதல்.

(க0) சிவபெருமானுடைய மகிமையையும், புண்ணிய பாவங்களையும் சிவபெருமானை வழிபடுமுறைமையையும் அறிவிக்கிற சைவப் பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது.

(கக) சிவநிந்தை, சிவசாத்திரநிந்தை, குருநிந்தை, வேதசிவாகமநிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைக் கேளாது நீங்கிவிடுவது.

(கஉ) திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார், திருவள்ளுவ நாயனார், சேக்கிழார்நாயனார், பட்டினத் தடிகள், திராவிடமகாபாஷிய கர்த்தாவாகிய சிவஞான யோகிகள் முதலாகிய நாயன்மார்களது திருநக்ஷத்திரங்களிலே அவரவருடைய சரித்திரங்களைப் படித்தும் கேட்டும் சிவனடியார் ஒருவருக்காவது அன்னங்கொடுத்து விரதத்துடன் இருப்பது.

(கங) நிருவாண தீக்ஷைபெற்றுக்கொள்வது.

(கச) ஞான நூல்களை விதிப்படி (மூலங்களைப்) பாராயணஞ் செய்வது.

(கரு) ஞானாசாரியரை யடைந்து ஞானநூற்பொருள்களைக் கேட்டுச் [illegible]தித்துத்தெளிந்து நிட்டைகூடுவது.

(கரு) செய்யத்தகாத பாவங்களைச் செய்தாலும், செய்யத்தக்க புண்ணியங்களைச் செய்யாது விட்டாலும், மனம்பதைத்து அஞ்சி நடு நடுங்கிக் குருவை அடுத்து அவர் சிவாகமப்பிரகாரம் விதித்த பிராயச் சித்தத்தை விசுவாசத்துடன் செய்து கொள்வது.

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வமதி தோயச் செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ் தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

வாதுசெய்து மயங்கு மனத்தரா
யேது சொல்லுவீராகிலு மேழைகாள்
யாதோர் தேவரெனப் படுவார்க்கெலா
மாதேவனலாற் றேவர் மற்றில்லையே.

திருச்சிற்றம்பலம்

மெய்கண்ட தேவர் திருவடி வாழ்க.
சிவஞான யோகிகள் திருவடி வாழ்க.

இங்ஙனம்,
சுப்பிரமணியபிள்ளை,
திருஞானசம்பந்த சுவாமிகள் திருமடம், மதுரை.

மழையும் தமிழரும்.

(::)

மழையைப்பற்றித் தமிழ் மக்கள் எவ்வளவுதூரம் அறிந்திருக் கிருர்கள்? மேனாட்டுப்பரங்கியர் அபிப்பிராயமென்ன? என்னும் விஷயமே இவண் எழுதப்புகுந்தனம்.

நமது தமிழ்நூல்களிலெல்லாம் மழையின் சிறப்புக்கூறப்பட் டுள்ளது. மழையின் உற்பத்தியைப்பற்றிக் கூறுவன புராணங்களே யாம். எல்லாப்புராணங்களிலும் நாட்டுப்படலத்தில் மழையினுற் பத்தி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. இராமாயண முத[illegible] காவி யங்களிலும் காணலாம்.

வெண்ணிறம் பொருந்திய மேகமானது கடலிற்சென்று நீரை மொண்டு கருக்கொண்டு கருநிறமெய்தி மீண்டு வானத்தின் வழி மலைப்பக்கமடுத்து மழைபொழிகின்றதாகவே எல்லாத் தமிழ்வித்துவான்களும் கூறியிருக்கின்றனர்.

பரங்கிக்காரர் இதனைப்பரிகசித்துச் "சூரியனுடைய உஷ்ண கிரணத்தால் கடல்நீர் சூடுகொண்டு ஆவிரூபமாகி மேலேகிளம்பி உயர்ந்த இடத்தையடுத்து அவணுள்ள குளிர்ச்சி மிகுதியால் உறைந்து கனத்து மழைவடிவமாகக்கீழே விழுகின்றதேயல்லாது மேகம் கடல் சென்று நீரைமொண்டு போதல் இல்லை" எனக்கூறி அம்மட்டிலமையாது 'சூரியவெப்பத்தால் நீராவியே மழையாகின்ற உண்மை தமிழர்களுக்குத்தெரியாது' என்றுங் கூறிவருகின்றனர். பரங்கியர் இங்ஙனம் கூறுவதில் வியப்பில்லை. ஆங்கிலப்படிப்பிலே வாணாள்போக்கும் நவீன அறிவாளிகளான நம்மவர் பலரும் இவ்வாறே கூறிவருகின்றனர்.

சூரியவெப்பத்தால் மழைபொய்யும் உண்மை நம்மவர்க்குத் தெரியுமா தெரியாதா என்று ஆராய்ச்சி செய்வாம்.

இற்றைக்கு 500 வருஷங்கட்கு முன்னிருந்த அதிவீரராமபாண்டியர் என்னும் சிறந்த தமிழ்வேந்தர் தாமியற்றிய நைடதம் என்ற நூலில்

> " கருவி மாமழை கலைமக ளுருவென விளங்கி
> யிருவி சும்பிடைப் படர்ந்துசென் றினமணி கொழிக்கும்
> பரவை வெண்டிரை மேய்ந்துயர் பனிவரை யுயிர்த்த
> வுருவ வோடரித் தடங்கணாளுருக்கொடு மீண்ட"

என்ற கவியால் மேகமானது சரசுவதியின் வடிவம்போல வெண்மையாகச் சென்று கடல் நீரைக்குடித்து உமாதேவிவடிவம்போலக் கருநிறமெய்தி மீண்டது என்று கூறியுள்ளார்.

இவ்வாறு கூறிய இவர்தாமே பின்னர் அன்னப்பக்ஷி நளனிடம் வந்து கூறுஞ் சந்தர்ப்பத்தில்

" வருந்தமுன் புகன்ற கொடியவென் மொழியின் வருபிழையனைத்தையு மின்னே, திருந்தலர்க் கடந்தோய் மகிழுமா செய்து தீர்க்குவன் றினஞ்செய்வோன் வெய்தா, விரிந்த தன் கரத்தி னலைகட

லுடுத்த மேதினி யிடத்தபைங் கூழ்கள், கரிந்தன தளிர்ப்ப வெள்ளிவீ ழுன்ன கணமழை பொழிவது கடுப்ப" என்னும் கவியில் "சூரியன் கிரணத்தால் மழை பொழிவதுபோல" என்று கூறியிருக்கின்றார். சூரிய கிரணத்தால் மழை பொழியும் உண்மையை யிவர் எந்த ஆங்கில வல்லவரிடம் அறிந்தாரோ?

கவிச்சக்கிரவர்த்தி யென்று எல்லா வித்துவான்களாலும் புகழப்பெற்ற ஸ்ரீ கச்சியப்பமுனிவர் தணிகைப் புராணத்தில்

"கடவுள் வெண்கரி விசும் பொரீஇப் புரந்தரன் காவலந் திசை நோக்கிப், படர்வ தொத்துவெண் ணிறமுகிற் குழாமணி படுகடற் பரப்பண்மித், தொடலை வெண்டிரைப் பெரும்புனன் முகந்தது தொல்லைபோ லொருசாப, மடர வல்விரைந் தெழுந்தென வுடல்கறுத் தந்தரத் தெழுந்தன்றே" என்னுங்கவியால் வெண்மேகம் கடல் சென்று நீருண்டு கருநிற மெய்திக்கிளம்பியதாகக் கூறினர். இம்முனிவர் பெருமான்றானே பின் களவுப்படத்தில்

"உருப்பவிர் திக்கதிர் காலும் பரிதி யுலகினிடை
விருப்பவிர் மேகம் விளைப்பதன்றேவிழுமக் கடவுள்
ளுருப்பவிர் பூண்முலை யாய்விழுந் தியானமுந் தத்துறந்தங்
கிருப்பவ ரேயென தாருயிர் காவற் கிருப்பவரே" என்னுங்

கவியால் சூரியன் மேகத்தையுண்டாக்குவதை வெளியிடுகின்றார்.

ஆகவே சூரியகிரணத்தால் மழைபொழியும் உண்மையைத் தமிழர்கள் அறியாதவர்களல்லர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகின்றது.

ஆனல் இவ்வுண்மையை யறிந்த தமிழ்ப்புலவர்கள் எல்லாரும் உள்ளதையுள்ளபடி கூறாமல் மேகம் கடல்சென்று நீரைமொண்டு வந்து பெய்வதாகவே கூறிச்செல்வதற்கு யாது காரணம்? என்பது ஆராயத்தக்கது. தமிழ்ப்புலவர்கள் தங்கள் நூல்களில் பலவற்றையும் வருணனை முகத்தால் உய்த்துணரவைத்துக் கூறிப்போதல் மரபாதல்பற்றி சூரியகிரணத்தை மேகமாகக்கொண்டு அக்கிரணம் கடல் நீரைச் சுவற்றி யிழுத்து வந்து மழை பொழிகின்றதற்குப் பதிலாக மேகமே (சூரியகிரணம்) கடல் நீரை யெடுத்துவந்து பொழிவதாகக்

கூறியிருக்கின்றனர். புலவர்கள் கருத்துண்மையை யுய்த்துணராமலே அவர்கட்கு அது தெரியாது இவர்கட்கு இது தெரியாது என்று வாய்க்கு வந்தபடி கூறுவது அறிவன்றே. அன்றியும் ஒரு விஷயத்தைப்பற்றி ஒரு புலவர் ஒரு விதமாகக் கூறினாராயின் பின்வரும் புலவரும் அவ்விஷயத்தைப்பற்றிக் கூறுங்கால் முற்புலவர் கூற்றைத் தழுவித்தாமும் கூறிப்போதலும் தமிழ் வித்வான்கட்குள்ளொரு பெரு வழக்காகும். பல நூல்களை ஆராய்ந்தார் எவரும் இவ்வுண்மைகளை நன்கறிவர். துணிகட்டுவதற்கும் அறியாது காட்டுவாசிகளாகத் திரிந்துகொண்டிருந்து நம்மைக்கண்டு ஆடையுடுக்கப்பழகிய பரங்கியர் விடாமுயற்சியால் நம்மவர்கள் எழுதிய நூல்கள் பலவற்றையும் கொள்ளைகொண்டு ஆராய்ந்து ஒவ்வொன்றையும் செய்து பழகுவாராயினர். அப்பழக்கமுதிர்ச்சியால் பலனடைவாருமாயினர். இதனானே அவர்கள் நம்மவர்களைவிட அறிவிற் பெரியராகத் தம்மை மதிப்பதும் அம்மட்டிலு நில்லாது நம்மவர்கட்கு ஒன்றுந்தெரியாதென்று அவமதிப்பதும் அன்னார் பகட்டுரையால் மனமயங்கிய கறுப்புப் பரங்கியர் தலைவிரித்தாடுவதும் எவ்வளவு ஆச்சரியம்! பின்வந்த கொம்பு முன்வந்த செவியை மறைத்ததுபோல நம்மிடமிருந்தே சகலமும் கற்றறிந்துகொண்டு நம்மையொன்று மறியாதவரென்று பரிகசிக்கின்றார்கள். இதனினும் புதுமை யாது? உற்று நோக்குவோமாயின் நம்முன்னோர்கள் வெளியிடாத விஷயமொன்றுமில்லை. நம்முன்னோர்களைப் பார்க்கினும் அந்நிய நாட்டார் அறிவு அதிக முற்றவர்களல்லர். நம்முன்னோர்கள் நமக்கு உதவியாக எழுதிவைத்த பெரும் புதையல் போன்ற பலநூல்களையும் போற்றாது கைதவறவிட்ட நாம் இப்போது பிறரால் பரிகசிக்கப்பெறுவது மட்டிலமையாது நம்முன்னோர்கட்கும் குறைவை உண்டுபண்ணுகின்றவராகின்றோம்.

நம்முன்னோர்களைப்பற்றி யாரேனும் குறை சொல்லப்புகுந்தால் நன்கு யோசித்து அறிந்து பேசும்படி வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

முருகவேள்.

தாமிரமும் தண்ணீரின் சுத்தமும்.

சிலகாலமாக ஐரோப்பிய ரஸாயன சாஸ்திரிகள் தாமிரத்தின் உபயோகத்தைக்குறித்தும் அதுதண்ணீரைச் சுத்திசெய்து பல கொடிய வியாதிகளை அடியோடே தொலைத்துவிடுகிறதென்பதைக் குறித்தும் அடிக்கடி எழுதிவருகிறதை நம்மவர் அநேகர் கற்றும் கேட்டுமிருக்கலாம்; நம்முன்னோர்கள் இதுவிஷயத்தில் கைதேர்ந்தவர்களாயிருந்து வந்தார்கள். நாம் பருகும் நீரைத் தாமிரபாத்திரத்திலேயே வைத்துப்பருகுதல் பரிசுத்தமென்றும் வைதிககாரியங்களுக்கெல்லாம் தாமிரத்தையே உபயோகித்தல்வேண்டுமென்றும் அதன் மேன்மையை வற்புறுத்திவந்தார்கள். அவ்வாறு செய்துவந்தது சாஸ்திர சம்பந்தமான தேக சௌக்கியத்துக்கே. அதனை நன்கு உணராமல் நாம் அந்நியர்கள் வழியை அநுசரித்து செப்புப்பாத்திரத்தை நீக்கத் தலைப்பட்டோம். வைதிகர்கள்கூட செப்புப்பாத்திரங்களை வெறுக்கத்தொடங்கினர். இன்னும் நம் வீடுகளில் வழங்குகிற பித்தளைக்குடத்துக்குச் செப்புக்குடம் என்று பெயர் வழங்குவதை நாம் அறிவோம். இது காராட்டை வெள்ளாடு என்பதை ஒக்கும். இதனாலேயே நம்மவர் தண்ணீர் வைத்துக்கொள்வது செப்புக்குடம் என்று தெரிகின்றது. சிராத்தாதிகளுக்கு இன்னும் செப்புப்பாத்திரங்களையே உபயோகித்து வருகிறோம். செம்பு என்றபதமே செப்பு என்பதின் விகாரமாகி உபயோகப்பட்டிருக்கலாம். ஆகையால் ஹிந்துக்கள் ஆதிகாலந்தொடங்கியே செம்பின் அரியகுணத்தைத் தெரிந்தவர்கள் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. முன்போல் இனி நாம் நம்வீடுகளில் செப்புப்பாத்திரங்களிலே நீரை வைத்துக்கொண்டு அதனைப்பருகுதல் நலமாகும். சீனர்கள் செப்புப்பாத்திரங்களிலேயே நீரை வைத்துப் பருகுவது வழக்கம். இவ்வழக்கம் நெடுநாட்களாக அவர்களிடம் குடிகொண்டிருக்கிறது.

மோல்லன் என்னும் பேர்போன வைத்தியர் ஒருவர் சமீபகாலத்தில் செம்பின் அரியகுணங்களைப்பற்றியும் அதனால் தண்ணீர் சுத்தமாகிறதைப்பற்றியும் அநேகவியாதிகள் நீங்குவதைப்பற்றியும் ஒரு சிறு புத்தகம் எழுதி வெளிப்படுத்தியிருக்கிறார். அதில் அவர் கூறுவ

தாவது:—ஒரு செப்புப்பாத்திரத்தில் தண்ணீரை வைத்தால் அத்தண்ணீரிலுள்ள சிறு விஷப்பூச்சிகள் சிறிது நேரத்துக்கெல்லாம் இறக்க ஆரம்பிக்கின்றன. அவ்விதம் பரிக்ஷைபார்த்ததில் மூன்றுமணி நேரங்களுக்குள் ஏறக்குறைய நான்குலக்ஷம் பூச்சிகளில் பதினெண்ணாயிரம் தவிர மற்றவையெல்லாம் நசித்துவிடுகின்றனவாம். விஷபேதிகாலங்களில் செப்புக்கம்பிகளாற் செய்த அரைக்கச்சையைக்கட்டிக்கொண்டால் அதனைத்தடுக்கலாமென்று ஜப்பான் தேசத்திலிருக்கும் ஒரு பிரன்சு வைத்தியர் அதுகண்ட நோயாளிக்குச்சொல்லி வந்தனராம். அதனால் அநேகர் சொஸ்தமானார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது.

மற்றொருவைத்தியர் கூறுவதாவது:—விஷபேதிகாலத்தில் உண்டாகும் கொடிய நோயைத்தடுப்பது சுலபமென்றும் அதற்கு ஒரு செப்புப்பதக்கத்தைச்செய்து ஓர்நுனியில் துவாரம்செய்து பட்டுக்கயிற்றிற்கட்டி நாபிக்கு இரண்டு அங்குலத்துக்குமேலாக வயிற்றிற்படும்படி கழுத்திலிருந்து தொங்கவிட்டால் அவ்வியாதி அணுகாதென்றும் கூறியிருக்கின்றனர். செம்புச் சுரங்கங்களில் வேலை செய்கிறவர்களுக்கு இக்கொடியநோய் ஒருபொழுதும் காண்கிறதில்லையாம். அதனாலேயே மேற்கூறியவழிகளை அதனைத்தடுப்பதற்குக் கண்டுபிடித்திருக்கிறார்கள். செம்பில் களிம்புவராமல்மட்டும் அடிக்கடி புளியிட்டுச் சுத்தம்செய்தல் அவசியம். களிம்பு பிடிக்கும்வண்ணம் விட்டுவிட்டால் அக்களிம்பு விஷமாகிக் கேடுண்டாக்கும். ஆகையால் களிம்புபிடியாதவண்ணம் ஜாக்கிரதையாயிருத்தல்வேண்டும். இதுநிற்க.

வெள்ளிநாணயங்களிலும்கூட பாஸில்லிஎன்ற அணுவுக்குச்சமானமான விஷப்பூச்சிகள் காணப்படுகின்றனவென்றும் செம்புநாணயங்களில் அவைகள் ஒருக்காலும்காணப்படவில்லையென்றும் கூறியிருக்கிறார் மேற்கூறிய பிரசித்தவைத்தியர். இதனால் செம்பின் பரிசுத்தத்தன்மை நன்கு புலப்படுகின்றது. ஆகையால் நம்நாட்டார் நம் பழையவழக்கப்படி செப்புப்பாத்திரங்களிலேயே தண்ணீர்வைத்துப் பருகுவார்களாக.

ஒரு சாஸ்திரவிசாரி.

பருத்தி.

மனிதர்களுக்கு உண்டியும் உடையும் இன்றியமையாதன. இவையின்றி மனுஷன் ஜீவிப்பது முடியாது. உடையை ஒழித்துவிடும்படியான காட்டு மனிதர்களும் தழை குழைகளைக்கட்டிக்கொண்டு ஜீவித்துவருகிறார்கள். எவரும் உண்டியின்றி ஜீவித்தல் இயலாது. நாகரிகம் அடைந்தவர்கள் உடையின்றியிருப்பது அசாத்தியம். ஆகையால் இவ்விரண்டும் உலகில் மனிதர்களுக்குத்தீராத வஸ்துக்கள். உண்டியைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டுவதில்லை. எப்பாடுபட்டாகிலும் மனிதர் அதனைத் தேடிக்கொள்வார்கள். உடைவிஷயத்தைப் பற்றி இன்னும் நம் நாட்டார் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பலவுண்டு. உடைக்குப் பருத்தியே முக்கியம். பட்டு மயிர் சணல் முதலிய வேறு கருவிகளும் உபயோகப்பட்டாலும் நம் நாட்டாருக்குப் பருத்தியே மிகுதியாய் உபயோகப்படுகின்றது. இப்பருத்தியை அமேரிக்கர் மிக்க கவலையுடன் பயிர்செய்து வருகிறார்கள். அதனை அவர்கள் இராஜ விளைவு என்று பெயரிட்டு அழைப்பார்கள். உலகத்தில் முற்காலத்தில் நம் இந்துதேசமே பருத்தி பயிர்செய்வதில் பிரசித்திபெற்றிருந்தது. நம் பருத்தியே இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிவந்தது. தற்காலம் அமேரிக்கா பருத்தியே மேன்மையாகக் கொண்டாடப்படுகின்றது. அவர்கள் அதனை மிக்க கவலை எடுத்துக்கொண்டு விஸ்தாரமாகப் பயிர்செய்வதுமன்றி பயிர்செய்த பருத்தியைச் சுத்தம்செய்வதிலும் கண்ணுங் கருத்துமாயிருந்துவருகிறார்கள். நம் நாட்டில் சாகுபடியும் ஏராளமாகச் செய்யவில்லை. பயிர்செய்த பருத்தியையும் நன்கு சுத்தப்படுத்துகிறதில்லை. இதனால் அயல்நாட்டார் நம் பருத்தியை நாணயமுள்ளதாகமதியாமல் விட்டு வருகிறார்கள்.

நம் நாட்டில் பருத்தி சாகுபடியாகக்கூடிய நிலம் சுமார் ஒன்றரைக்கோடி ஏகர்கள். அதில் நாம் நூற்றுக்கு முப்பதுஏகர் சாகுபடி செய்யலாம். அதற்கு நாம் பத்துஏகரே சாகுபடிசெய்கிறோம். அதனால் உண்டான கேடியாதென்று பார்ப்போம். தற்காலம் நம் நாட்டில் நடக்கும் நெசவு சம்பந்தமான கணக்குகளைச் சற்றுஆராய்வோம். 1904-ம் ௵த்தில் நம் நாட்டில்உள்ள பஞ்சாலைகள் 203 இது முன்

னிலும் அதிகமாயிருப்பினும் மிகவும் சொற்பமென்றே தெரியவரும். பஞ்சாலைகளிலிருந்து சென்ற வருஷம் நெசவான துணி 60 கோடிகளும் நாம் இறக்குமதிசெய்தது 200கோடிகளும்ஆம்நாம் ஏற்றுமதிசெய்த பருத்தியின் கிரயம் சுமார் 21½ கோடிரூ. இதற்கு 39கோடிரூ பெறுமான துணி இறக்குமதி செய்திருக்கிறோம். இதனால் நம்நாட்டுக்கு வேண்டிய துணி யந்திரமூலமாக நான்கில் ஒருபாகமே நெசவாகிறதாக ஏற்படுகின்றது. கைத்தறியால் நெசவாகிற துணி சுமார் 90 கோடி கஜமாகிறது. எல்லாவற்றையும் கணக்குப்பார்க்கும்பக்ஷத்தில் நம் நாட்டுக்குவேண்டிய துணி மூன்றில் ஒருபங்குதான் நம்நாட்டில் நெசவாகிறது. மற்றை இருபங்குதுணி அயல்நாட்டிலிருந்தே வரவேண்டியிருக்கிறது. நாம் பருத்தி சாகுபடி யாகக்கூடிய நிலங்களில் மூன்றில் ஒருபங்கே சாகுபடிசெய்கிறபடியாலும் இருபங்குநிலத்தை சாகுபடியில்லாமல் விட்டுவிடுகிறபடியாலும் நாட்டுக்குவேண்டிய துணியில் இருபங்கு அயல்நாட்டிலிருந்தே வரவேண்டியதாகிறது. நம் குடியானவர்கள் இதனை நன்கு கவனித்துப் பருத்தி சாகுபடியை விருத்திபண்ணுவார்களாக.

முற்காலத்தில் நம்குடியானவர்கள் கிராமாந்தரங்களில் சாகுபடி செய்தநேரம்போக கைராட்டினம் வைத்துக்கொண்டு தங்கள் கிராமத்துக்குவேண்டிய நூலை நூற்று நெய்து உடை தேடிக்கொள்வார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் சேணியர்கள் ஏராளமாயிருப்பார்கள். மற்றைக்குடியானவர்கள் வீட்டிலும் நூல் நூற்று வருவது வழக்கம். ஏனைநாட்டுத்துணி வந்து பரவவே நம் நாட்டு நெசவு நிற்கக் காரணமாயிற்று. அமேரிக்கா நாட்டிலிருந்தே இங்கிலாந்துக்குத்தற்காலம் ஏராளமான பருத்தி வரவேண்டியிருப்பதால் ஒருகால் அமேரிக்கர் நிறுத்தத்தனைப்படவும் கூடுமென்றுபயந்து மான்செஸ்டர் வியாபாரிகள் ஆங்கில கவர்ன்மெண்டாரைத் தூண்ட அவர்களும் நம்இந்தியா கவரன்மெண்டுக்கு அறிவித்துப் பருத்திசாகுபடியை விருத்திசெய்வதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இனி நம் நாட்டில் பருத்திசாகுபடி அதிகரித்து நம் உடைக்குவேண்டியஅளவு பலன்கொடுக்குமென்று நம்புகிறோம். நம் கைத்தறிகளால் அதே வேலை நடந்துவரும்பக்ஷத்தில் நம் நாட்டுக்குப் பெருத்த க்ஷேமம் உண்டு. பலர் ஜீவிக்க வழி ஏற்படும். இயந்திரங்கள் மூலமாக நெசவு

ஏற்பட்டால் சிலரே பிழைக்க நேரிடும். கைத்தறிகளால் பலருக்கு ஜீவனம் ஏற்படும், கைத்தறிகளால் செய்யப்படும் உடை நாணயமாகவும் நீடித்தகாலம் தாங்கக்கூடியதாகவும் இருக்கும். பறக்கும் தறிகள் சாதாரணக் கைத்தறிகளைவிட வேகமாய் வேலைசெய்கிறதாகப் பலமுறை நிதர்சனமாகக் காட்டப்பட்டு வந்திருப்பதால் அவைகளே அதிகமாய்ப் பரவத் தலைப்பட்டிருக்கின்றன. கிராமத்தார் இவ்விஷயத்தை நன்கு கவனித்து நெசவுதொழிற்காரர்களுக்கு முன்பணம் கொடுத்து உதவிசெய்யும்பக்ஷத்தில் பல ஏழைகளுடைய கஷ்டங்கள் நிவிர்த்தியாகும் என்பது திண்ணம். இம்மாதிரி சில்லரைக் கைத்தொழில் அபிவிருத்தியானலொழிய நம் நாட்டு வறுமை தொலைவது கஷ்டம். நுணுக்கமான விஷயங்களை அசட்டைசெய்வதால் பெருங்கேடு உண்டாவது திண்ணம். சிறிய துவாரத்தால் ஒரு பெருங்கப்பலும் முழுகிப்போகுமன்றோ. இதுவிஷயத்தில் இதுகாறும் உள்ள தூக்கத்தை ஒழித்து இனியாவது விழித்துக்கொண்டு அயல்நாட்டார் கொள்ளைகொண்டுபோகாதவண்ணம் நம் நாட்டைக் காப்பாற்றுவது நம்மெல்லோருடையகடமையாகும். நம்அஜாக்கிரதையால் நம்சொத்தைக் கொள்ளைகொடுத்துப் பின் பசக்கப் பசக்க விழிப்பதிற் பயனில்லை. கைத்தறிகளை உபயோகிப்பதுடன் இயந்திரங்களையும் நம்முயற்சியாலேயே விருத்திபண்ணவேண்டும்.

தற்காலம் நமக்குவரும் இயந்திரங்களெல்லாம் அயல்நாடுகளிலிருந்தே வருகின்றன. நம் நாட்டிலேயே அவைகளைச் செய்யவேண்டுமானல் ஏராளமான இரும்பும் நிலக்கரியும் வேண்டும். இரும்புச் சுரங்கங்கள் சொற்பமே இருக்கின்றன. அவைகளைப் பிரயாசைப்பட்டுக் கண்டுபிடித்து வேலைசெய்யவேண்டும். அவ்வேலைசெய்யத்திறமையுள்ளவர்கள் தற்காலம் நம் நாட்டில் கிடைப்பது அரிது. ஆகையால் புத்திமான்களை அமெரிக்கா, இங்கிலாந்துமுதலிய இடங்களுக்கு அனுப்பிப் பயிற்றவேண்டும். அதற்கு நம் தனிகர்கள் உதவிசெய்ய முன்வரவேண்டும். இவைநிற்க. பெருத்த மூலதனம் சேர்க்கவேண்டும். அதற்கு ஒற்றுமையும் நம்பிக்கையும் இன்றியமையாதஸாதனங்கள். இவற்றிற்கெல்லாம் ஆதாரமானது அறிவும் சத்தியமும். அவைகளை அபிவிருத்திபண்ண வழி வகை தேடவேண்டும். நம் நாட்டிலேயே கைத்தொழிற் பாடசாலைகளை ஏற்படுத்த முயலவேண்டும். எல்

லாம் சிறுகச் சிறுக ஆகவேண்டியிருக்கிறது. நம்நாட்டில்சுதேசியம் விருத்தியடையுமானல் இவைகளெல்லாம் கூடியசீக்கிரம் அபிவிருத்தியடையும். இவைகளெல்லாம் அபிவிருத்தியடையும்பக்ஷத்தில்தான் நாட்டின் வறுமை தொலையும். நம் நாட்டார் முக்கியமாய்க் கிராமத்தார் வழக்குக்களுக்கு வாரியிறைக்கும் பணத்தைக் காப்பாற்ற முயன்றால் இவைகளெல்லாம் நிறைவேறுவது அசாத்தியமாகாது.

நம் நாட்டில் போதுமான பணமில்லையென்று குறை கூறிக்கொண்டு எய்த்தோம் இளைத்தோம் என்று ஏமாந்திருப்பவர்கள்பலர். இவர்கள் முயற்சியைக் கைக்கொள்வதுடன் சுதேச அபிமானத்தையும் விருத்திபண்ணி சகோதர வாஞ்சையை உண்மையிற் காட்டுவார்களானல் தேசம் க்ஷேமம் அடைந்து சகல போகபோக்கியங்களையும் அடைந்து சுகமாக வாழ்வோம். ஆகையால் மேற்கூறிய குணங்களும் அறிவும் அபிவிருத்தியாகும்படியான மார்க்கத்தைத்தேடுவது நம் முதற்கடமை. இனியும் நாம் தூங்கும்பக்ஷத்தில் பெருத்த கேடுண்டாகி தேசம் க்ஷீணதசையடையும். ஆகையால் கிராமத்தார்களே, நாட்டார்களே, தூங்காதேயுங்கள். தூங்காதேயுங்கள். நன்றாய் விழித்துக்கொள்ளுங்கள். சுறுசுறுப்பாய் வேலைசெய்யத்தொடங்குங்கள், "முயற்சி திருவினையாக்கும்" பாடின்றிப் பலனில்லை" சுயநயத்தை விட்டுப் பரோபகாரத்தையே நாடுமின். "ஆத்மவத்ஸர்வபூதானி" என்ற மகா வாக்குக்கிணங்க எல்லாவுயிரையும் தன்னுயிர்போல் எண்ணி சர்வஜனங்களும் சுகமுறும் வண்ணம் மனமொத்து உழைப்போமாக. "ஒற்றுமையால் உலகத்தைச் சயிக்கலாம்" "ஒத்தால்வாழலாம்" என்ற ஒப்பற்ற உண்மையைப் பற்றுக் கோடாகக் கொண்டு நடந்து சுகமுறுவோமாக.

பத்திராதிபர்.

சமாசாரக்கொத்து.

கல்கத்தாவில் இம்மாதம் நடக்கும் கைத்தொழிற்காட்சி சபையை நம் கவர்னர் ஜனரல் அவர்கள் திறப்பார்கள்.

* * * * *

ஐதராபாத்திலுள்ள அப்ஸல்கன்ஜ் ஆஸ்பத்திரிக்கு அவ்வூரில் சென்ற முப்பதுவருஷகாலமாக வேலைபார்த்த ஸர்ஜன் ஜான். லை. எம். டி. என்பவர் ஐம்பதினுயிரரூபா நன்கொடை யளித்திருக்கிறார் என்ற சமாசாரம் மிக்க சந்தோஷத்தை உண்டாக்கக்கூடியது.

* * * * *

சென்னை பின்னி கம்பெனியாருடைய பர்ம் லண்டனில் ஒரு லிமிடெட்கம்பெனியாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு லக்ஷம் பவுன் முதலாம். போர்டார் மானேஜிங் டைரக்டருடைய சம்பளம் இன்னதென்று இனித் தீர்மானிப்பார்கள்.

• • • • •

பாட்டியாலா தேசத்தில் பஞ்சாயத்து ஏற்பாடு நடத்தப்பட்டு வந்ததில் மிகவும் அநுகூலமென்றே கூறப்படுகின்றது. 13,569 கேஸ்கள் பஞ்சாயத்துக்கு முன்னிலையில் விசாரணையானதில் 715 கேஸ்கள் மட்டுமே மேற்கோர்டுகளுக்குக் கொண்டு போகப்பட்டன. அவைகளில் 220 கேஸ்கள் மட்டும் மாறுதலாயின. இது 100-க்கு 2 கேஸாகிறது. நம் கோர்டுகளுக்கு வரப்பட்ட கேஸுகளில் 100-க்குச் சிலசமயம் 15 அல்லது 20 கூட மாறுகின்றன. நாடுமுழுதும் பஞ்சாயத்துக் கோர்டுகளே ஏற்பாடானால் ஜனங்களுக்கு மிக்க அநுகூலமுண்டாகும். தேசக்ஷேமத்துக்கும் குறைவில்லை. தற்காலம் எந்தச்சிறு வழக்குக்களையும் கோர்டுக்குக் கொண்டுபோவதால் காலஹரணம், பொருள்நஷ்டம் முதலியகேடுகள் நேரிடுகின்றன. நம் நாட்டின் வறுமைக்கு முக்கியகாரணங்களில் வழக்குக்குப்போதலும் ஒன்று. ஆகையால் நம் ஜனங்கள் பஞ்சாயத்துக்கோர்டு வரும்படி முயற்சிப்பார்களாக. கோர்டுவழக்குக்குப் போகிற பணத்தில் பாதி செலவிட்டால் நம்தேசத்துக்கிருஷிபாவரும் அதிசயிக்கும் வண்ணம்விருத்தியாகும் என்றைக்கு நாம் இந்த அநுகூலத்தை அடைவோமோ தெரியவில்லை

சாகுபடியாகும் வயல்களுக்கு இடையூறாக இருக்கும் மரங்களைச் சொந்தக்காரர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து வெட்டச்செய்யலாம். அப்படி அவர்கள் வெட்டாவிட்டால் குடித்தனக்காரர்களே வெட்டிப் போடலாமென்றும் அதற்கு ஹைகோர்ட்டு தீர்மானமே இருக்கிறதென்றும், குடிகள் அதை ஊர்ஜிதத்துக்கு கொண்டுவரப்பயப்படக்கூடாதென்றும் ரிவினியூ விஷயத்தில் மிகவும் அநுபவசாலியான நம் திவான் பகுதூர் ரெகுநாத ராயர் அவர்கள் கூறுகிறார்கள். கிராமத்தார் இது விஷயங்களை நன்கு கவனிப்பார்களாக.

* * * * *

பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாகவும் புகைப்படங்கள் மூலமாகவும் மிஸ்டர் கோர் என்பவர் வெகு சிரமப்பட்டு நக்ஷத்திரக் கணக்கு எடுத்திருக்கிறார். அதில் பால்வீதி மண்டலத்தில் ஒருசதுர டிக்கிரிக்கு 4, 137 நக்ஷத்திரங்கள் காணப்படுகின்றனவாம். அதற்குச் சமீபத்தில் 1782 காணப்படுகின்றன. நக்ஷத்திரக்கூட்டங்களைத் தவிர்த்து நம் கண்ணுக்குப் புலப்படக்கூடிய நக்ஷத்திரங்களின் தொகை சுமார் நாற்பத்திரண்டு இலக்ஷம். ஆனால் இத்தொகை இதுவரை நினைத்து வந்த தொகைக்கு மிகக்குறைவே.

* * * * *

ஆப்கானிஸ்தானத்து அதிபதியாகிய அமீர் ஆக்ராவுக்கு இம்மாதம் 24உ வருவார். அச்சமயம் ஒரு தர்பார் நடக்கும். அதற்கு நம் கவர்னர் அவர்களின் சகோதரரும் நம்மாஜி கவர்னரும் ஆகிய வென்லக் பிரபு விஜயஞ்செய்வார். அவர் தம் சகோதரரைப்பார்க்கும் நிமித்தமே இந்தியாவுக்கு வருகிற சமயத்தில் அமீரையும் பார்க்கச் சமயம் வாய்த்தது. அந்த தர்பாருக்கு நம் சுதேச அரசர்களிற் சிலரே போவார்கள். அவர்களும் வைஸ்ராய்க்கு நேரில் எழுதிக் கொண்டதால் அனுமதி கொடுக்கப்பட்டார்கள். இதுவே அமீரின் முதல் விஜயம். மகம்மதியர்களுக்கு அவர் வரவில் பிரத்தியேகமான சந்தோஷமிருக்கும் என்பது திண்ணம்.

* * * * *

நம் தேசத்துக் கூலிகள் அயல்நாட்டுக்குச்செல்வதில் அஞ்சாத் தீரமுடையவர்கள். வருஷாவருஷம் இக்கூலிகள் அயல் நாட்டுக்குப்

போய்விடுவதில் நம் உள்ளூர் கிருஷிக்கு மிக்க கேடுண்டாகிறது. இலங்கை, (கண்டி), மோரிசு, நெட்டால், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குக் கூலிகளைப்பிடித்து அனுப்ப ஏஜண்டுகள் ஏற்பட்டு நம் தேசத்துக்குப் பல கெடுதிகளை விளைவிக்கிறார்கள். அம்மாதிரி வான்கோவார் என்னும் இடங்களுக்கும் கூலிகள் போகத் தொடங்கிவிட்டார்கள் இதனையறிந்த நம் காருண்ய கவர்ண்மெண்டார் அவ்வாறு போகிறவர்களுக்குத் தகுந்தவேலை அவிடத்தில் போதுமானபடி இல்லையென்றும் அங்குப்போனால் அவர்கள் அவஸ்தைப்பட வேண்டுமென்றும் பகிரங்கமாக விளம்பரப்படுத்தும்படி ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளுக்கும் போலீஸ் கமிஷனருக்கும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். சுதேச அபிமானமுள்ளவர்கள் நம் நாட்டை நஷ்டப்படும்படியாகவும் கஷ்டப்படும்படியாகவும் விட்டுவிட்டு அயல் நாட்டுக்குப்போய் அந்நியர் வசப்பட்டு விழிக்கிறார்கள். ஏராளமான பொருளீட்டலாம் என்ற எண்ணமே அவர்களை இவ்வாறு செய்யச்சொல்லுகின்றது. இந்தியாவில் தகுந்த வேலையும் கூலியும் கிடைக்காதுபோனாலல்லவோ அயல் ஊருக்குப்போகவேண்டும். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்றிருந்தாலும் வியாபாரம் பண்ணுகிறவர்களுக்குச் சொன்னதே ஒழிய கூலிக்காரர்களுக்குச் சொன்னதாகாது. ஆகையால் கூலிக்காரர்களுக்குக் கிராமவாசிகள் இதை யெடுத்துச்சொல்வார்களாக.

* * * * *

பிரமஞான சபையின் அக்கிராசனாதிபதியாகிய கர்னல் ஆல்காட்டுக்கு பெரிய அபாயம் நேரிட்டு இப்பொழுது அவ்வபாயத்தினின்றும் சொற்பம் நீங்கியிருக்கிறார். சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பு வழியாய் அடையார் வந்துசேர்ந்தார். தேகம் மிகவும் சௌக்கியம் ஆகியிருப்பதாகவும் முக்கியமான வேலைகளைத் தாமே கவனித்துவருகிறதாகவும் தெரியவருகிறதைக்கேட்டு சந்தோஷிக்கிறோம்.

* * * * *

மாட்டுவைத்தியசாலை ஒவ்வொரு முக்கிய இடத்திலும் இனி உண்டாகும். ரிவினியூபோர்டார் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் 3600 ரூ. செலவுசெய்ய அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். இஃது உத்தமமான விஷயமே.

பிளேகினால் இந்தமாதம் ஒருவாரத்தில்மட்டும் இந்தியா முழுவதும் இறந்தவர்களின் தொகை 6098, தாக்கினவர்களின் தொகை 7,765, தெய்வாதீனமாய் நம் சென்னை ராஜதானியில் அதிகமாயில்லை. ஒருநாளைக்கு ஒருவரே இவ்வியாதியால் இறந்தவர். பாம்பாயில் மிகவும் அதிகம். அடுத்து அலகபாத் முதலிய இடங்களில் அதிகம். வங்காளத்தில் அவ்வளவு அதிகமாயில்லை.

* * * * *

இந்தியா கவர்ண்மெண்டார் அனுமதிப்படி காஷ்மீர் மகாராஜா அவர்கள் பூன்ச் ராஜாவின் குழந்தையை ஸ்விகாரஞ்செய்து கொண்டனராம். ஏழைகளுக்குக் காப்பாற்ற முடியாதபடி குழந்தை பிறக்கிறதும் ராஜாக்களுக்குச்சீமையாளப் புத்திரர் இல்லாமற் போவதும் பெரும் வியப்பே. எல்லாம் ஈசன் செயலன்றோ.

* * * * *

லார்ட் கர்ஸன் அரசாக்ஷியில் நடந்த ஜீவகாருண்யமான செய்கையை அலகபாத் பத்திரிகையாகிய ஸிடிஸன் கூறுகிறது. நம் தேசத்துக்கு எத்தனை விதத்தில் பாடுபட்டுழைத்தும் லார்ட்கர்ஸனை நல்லவர் என்று சொல்பவர் மிகவும் சொல்பமானவரே. அவரைத் தூற்றுத சுதேச பத்திரிகை கிடையாது. அப்படியிருந்தும் அவருடைய அபார சாமர்த்தியத்தைப்பற்றி எவரும் வியவாமலிரார்கள். அவர் பல சுகுணங்கள் நிறைந்தவர் என்பதிலும் தடையில்லை. ஒரு பெங்காளி உத்தியோகஸ்தர் இருபது வருஷம் சர்க்கார்வேலையிலிருந்து பின் அநியாயமாய் நீக்கப்பட்டார். மேல் அதிகாரிகளுக்குப்பலமுறை அநீதத்தை எடுத்துக்காட்டியும் யாதும் பயன்படவில்லை. கடைசியாக அவ்வுத்தியோகஸ்தரது சிறு குமாரன் (எட்டுவயதுப்பையன்)லார்ட் கர்ஸனுக்கு ஒரு சிறுகடிதம் பென்ஸலால் எழுதினன். அது மிகவும் சுருக்கம். "தந்தைக்கு உத்தியோகமில்லை. நாங்கள் பசியால் வருந்துகிறோம். தாய்க்கு உடையில்லை" என்பது மட்டு எழுதப்பட்டிருந்தது. இக்கடிதத்தைப் பிரித்துப்பார்த்த கர்ஸன் ப்ரபுவின்மனம் மிகவும் இரக்கப்பட்டு உடனே அக்குடும்பத்துக்கு ரூ 500 அனுப்பியதுமன்றி அவ்வுத்தியோகஸ்தனுக்கும் வேலையைத்திருப்பிக்கொடுத்தனராம். இவரது அபாரகருணை மிகவும் கொண்டாடத்தக்கது. இவ்வித இரக்கமுள்ள நெஞ்சு படைத்தவரே ஜனங்களை ஆள ஏற்படவேண்டும். கர்ஸன் பிரபுவும் தேசவிஷயமாய்த் தாம் செய்த ஏற்பாடுகள் தேச அநுகூலத்துக்கென்றே கூறிப்போயிருப்பதால் அவர் மனமாண்மைக் குறைகூறுவதில் பயனில்லை. ஏழைகளுக்கு இரங்குபவர்களே தெய்வாம்சமுள்ளவர்கள் என்பது திண்ணம்.

* * * * *

இவ்வருஷம் கல்கத்தாவில் நடந்த காங்கிரெஸுக்கு 1500 டெலிகேட்டுகள் விஜயம் செய்திருந்தார்கள். நம் சென்னையிலிருந்தும்

பலபேர் போயிருந்தார்கள். நம் தாதாபாய் நௌரோஜியவர்களே இவ்வருஷம் அக்கிராசனம்வகித்தனர். எண்பத்திரண்டு பிராயத்தில் சிறிதும் சிரமமின்றி இவ்வுன்னத பதவியை இவர் மூன்றாம் முறை மிகவும் கம்பீரமாகவும் கௌரவமாகவும் வகித்தது நம் நாட்டார் செய்த பாக்கியமே. இவர் எழுதிவைத்த பிரசங்கத்தை வேறொருவர் படித்தனராம். இவரது தள்ளாப்பருவத்தில் அதிக சிரமம் கொடுக்கக்கூடாதென்றே இவ்விதத்தை அனுசரித்தார்கள் பிரசங்கத்தின் ஒவ்வொரு எழுத்திலும் தேசாபிமானம் ததும்பிநிற்கின்றது. அதனைப்படியாதவர்கள் பாக்கியமற்றவர்களே யாவார்கள். சுய ஆட்சி நம் நாட்டுக்கு அவசியமென்றும் அச்சுயாதீனத்தை நமக்கு அளிக்கும் வண்ணம் நாம் நம் காருண்ய அரசாங்கத்தாரை அடிக்கடி மன்றாடிக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் நாம் சிறிதும் அதைரியப்படாமல் இதுவிஷயத்தில் பெருத்த முயற்சிசெய்யவேண்டுமென்றும் எல்லோரும் மதவிஷயத்தைப் பாராட்டாமல் ஒத்து உழைக்கவேண்டுமென்றும் "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்றும் பிரிட்டிஷ் ராஜ்யத்தாரைப்போலவே நாமும் சுயாதீனம் பெறத்தக்க பிரஜைகளென்றும் அடிமைகள் ஆகமாட்டோமென்றும் வற்புறுத்தி வெகு அழகாய் எழுதப்பட்ட அவ்வுபந்யாசத்தை யாவரும் படித்தறியவேண்டுவது மிகவும் முக்கியமே.

பத்திராதிபர்.

புத்தகக்குறிப்பு.

விசுவநாதம் :— இது நம் மதுரையிலிருந்த நாயகர் வம்சதிலகனான விசுவநாதனுடைய பெருமைகளை விளக்கிக்கூறும் ஒரு நாடகத் தமிழ்நூலாம். இனிய சொற்றொடர்களால் அகவற் பாவாகப் பற்பல வருணனைகளும் கற்பனையலங்காரங்களும் இடையிடையே விரவிப் படிப்பவர் மனத்தைக் கவரும்படி இயற்றப்பெற்றுள்ளது. இதனைப் படிக்குந்தோறும் தமிழ் மக்களுள்ளக்கிளர்ச்சியடைவார்களென்பது திண்ணம். இந்நூலாசிரியராகிய தஞ்சை கலியாணசுந்தரம் ஐஸ்கூல் உதவிப்பண்டிதரும், தஞ்சைத் தமிழ்ச்சங்கம் தமிழகம் உதவிப்பத்திராசிரியருமான ப்ரும்மஸ்ரீ ஜி. எஸ். முத்துசாமி ஐயரவர்களை நாம் நேரிலறிவோம். இவர்கள் கல்விமுதிர்ச்சி பெற்றிருப்பதுபோலவே குணமுதிர்ச்சியும் பெற்றுள்ளார்கள். வித்துவக்காய்ச்சல் என்னும் அசூயை இவர்களிடம் பழகினவர்களுக்கும் வராது. இவர்கள் அன்புடன் இந்நூலை நமது பார்வைக்கனுப்பினது பற்றி இடையறு நன்றி கூறுகின்றோம். இந்நூல் விலை ரூபா ஒன்றுதான். தமிழ் நாட்டார் பலரும் இதனை வாங்கி வாசித்து மகிழ்வார்களானால் ஐயரவர்களின்னு மிதுபோன்ற பல நூல்களை எழுதிவருவார்கள். நம் நாட்டுக்குப் பேருபகாரமாகும். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பெருகுவதாக.

பத்திராதிபர்.